# மாலை தீப்பொறி

MALAE THEEPORI






2023 அக்டோபர் 16-31 தொகுதி 22 இதழ் 6 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200






## காசாவில் இனப்படுகொலை:
## இஸ்ரேல் போரை நிறுத்த வேண்டும்!

# இறந்துபோன ஒரு சாலையை சாலையில் பார்த்தேன்

**அஹ்லாம் பஸ்ஹாரத்** (Ahlam Bsharat)

***அரபு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் :***
**ஜெய்னா ஹாஸ்ஸன் பெக்**
(Zeina Hashem Beck)
***ஆங்கிலம் வழி தமிழில் :***
**எஸ்.வி.ராஜதுரை**

இறந்துபோன ஒரு சாலையை
சாலையில் பார்த்தேன்
அங்கேயே அதை விட்டுவிட்டேன்
இறந்துபோன ஒரு சாலையை
தரையிலிருந்து எப்படித் தூக்குவது
என்பதையோ
பதினான்கு தளங்களைக் கொண்ட
ஓர் கட்டடத்தை
நடுங்கிக் கொண்டே
எப்படிக் கையில் வைத்திருப்பது
என்பதையோ
யாரும் எனக்குச் சொல்லித் தரவில்லை.
*
பீதியுற்ற என் நண்பர்களை அழைப்பதற்கு
அஞ்சுகிறேன்
ஏனெனில் அவர்களிடம்
கடைசி வார்த்தையென்று
எதைச் சொல்ல வேண்டும்
என்பது எனக்குத் தெரியவில்லை
எப்படியிருந்தாலும்
அப்படி ஒன்றும் இருக்காது
அது உண்மை.
*
போரில் தப்பிப் பிழைத்த
ஒரு மீனைப் பற்றி
எழுதுகிறேன்
அதை எழுதுவது எளிது:
அந்த மீன் போரில் தப்பிப் பிழைத்தது
*
பீதியுற்ற பெயரில்லாத
ஒரு பூனையின் புகைப்படத்தைப் பகிர்கிறேன்
இது நல்லது:
பெயரில்லாமல் இருப்பது
எனவே சாவு உங்களை அழைக்காது
*
எனது நண்பர்கள்
பசு எனப் பெயரிடப்பட்ட
ஒரு பூனையைப் பற்றிச்
சொல்கிறார்கள்
ஆம், போரின் நடுவே
பசு என்ற சொல்லைக் கேட்பது
எனக்குத் தேவைப்பட்டது
ஏனெனில்
இந்த பயங்கரம் அனைத்துக்கும் பிறகு
பால் என் நெஞ்சை
வறண்டுபோகச் செய்துவிட்டது
*
பேட்மேன் , பாண்டா என்ற
இரு பெயர்களைக் கொண்ட
ஒரு பூனையைத் தூக்கிக் கொண்டிருக்கும்
காஸாவின் குழந்தையொன்றின்
வீடியோவைப் பார்த்தேன்
இரண்டு பெயர்களைக்
கொண்டிருப்பது நல்லது
*
அவற்றில் ஒன்றால்
சாவு உன்னை அழைக்கும்போது, நண்பனே
இன்னொன்றுடன் ஓடு
*
பூனையே சாவு உன்னை
பேட்மேன் என்று அழைக்கும்போது
வேகமாக ஓடு
ஏனெனில் உன் பெயர் பாண்டா
ஆக்கிரமிப்பினால் பாண்டா
என்ற பூனையைக் கொல்ல முடியாது.

*குறிப்பு: காஸா மீது 2021 மே மாதம் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகள் வான் வழித் தாக்குதல் நடத்தியபோது எழுதப்பட்டது.*

*நன்றி:* ArabLit from ArabLit's Wednesday Poetry,
https://arablitpoetry.substack.com/p/wednesday-poetry-raad-abdul-qadirs?utm_campaign=email-half-post&r=2hqww&utm_source=substack&utm_medium=email

2023 அக்டோபர் 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 6

உள்ளே


| | |
|---|---|
| வர்ணாசிரம விஸ்வகர்மாத் திட்டம் | 4 |
| காசாவில் இனப்படுகொலை | 7 |
| சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை | 9 |
| ஆசிரியர், அரசு ஊழியர் போராட்டம் | 11 |
| இதழியல் நெறி | 13 |
| வாச்சாத்தி உயர் நீதிமன்றத் தீர்ப்பு | 16 |


**முதன்மை ஆசிரியர்**
**வீ.சங்கர்**

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

**1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23**

**நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048**

தொலைபேசி: **9443507067**
**9840340741**

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

## சமூகநீதி, ஜனநாயகம் காக்க, ஸ்டெர்லைட் ஆணையப் பரிந்துரையும் வாச்சாத்தி உயர்நீதிமன்றத் தீர்ப்பும் உடன் செயல்படுத்தப்பட வேண்டும்!

நாற்பதாண்டு கால போராட்டங்களுக்குப் பின்னர் வாச்சாத்தி வன்கொடுமையாளர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்திருக்கிறது. காவல்துறை, வனத்துறை, வருவாய்த் துறையைச் சேர்ந்த குற்றவாளிகள் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு கூட செல்லலாம். உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் அவர்கள் வாச்சாத்தியில் குற்றம் நடந்தபோது இருந்த காவல்துறைக் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சித்தலைவர், வனத்துறை அதிகாரி மூவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பில் கூறியுள்ளார்கள். அதேபோல், இதற்கு முன்னர் ஸ்டெர்லைட் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர், காவல்துறை உயர் அதிகாரிகளும் குற்ற மிழைத்துள்ளார்கள் என்று கூறியிருந்தது நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம். ஆனால், உயர் அதிகாரிகள் யார் மீதும் எவ்வித நடவடிக்கை யையும் தமிழ்நாடு அரசு எடுக்கவில்லை. இப்போது வாச்சாத்தி வழக்கில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே வந்துள்ளது. இரண்டு சம்பவங்களும் அதிமுக ஆட்சியில் இருந்தபோது அரங்கேற்றப்பட்டவைகள். வாச்சாதி சம்பவம் ஜெயலலிதா காலத்தில். ஸ்டெர்லைட் சம்பவம் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில். அதுபோல் கூடங்குளத்தில் நடந்த காவல்துறை அராஜகமும் ஜெ. ஆட்சியில்தான். அப்படியிருந்தும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது திமுக அரசு. கூடங்குளம் மக்கள் மீதான வழக்குகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்கள் மாறினாலும் அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகள் எவ்வித அச்சமும் இன்றி தங்கள் அடக்குமுறை, அராஜகச் செயல்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு கடந்த சில நாட்களாக உழைக்கும் மக்களின் போராட்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்கள், டாஸ்மாக் ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள், விசைத் தறித் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் என தமிழ்நாடு எங்கும் போராட்டக்களங்களைக் காண்கிறோம். ஆனால், அவர்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளைத் தீர்ப்பது என்பதற்கு மாறாக, காவல் துறையின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. சென்னையில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்கள் மீது காவல்துறை அடக்குமுறை. நாகர்கோயில் அருந்ததியர் மக்கள் மீது சாதி ஆதிக்க வெறியுடன் தடியடித் தாக்குதல். பொய் வழக்கு. கோவை, மதுரை, தென்காசி, நெல்லை போன்ற இடங்களில் தூய்மைப்பணித் தொழிலாளர்கள் பணிப்பாதுகாப்பிற்காக, தனியார்மயத்திற்கு எதிராக வேலை நிறுத்தம், உள்ளிருப்புப் போராட்டம் என நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்று வதற்குப் பதிலாக அவர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. திமுக ஆட்சிக்கு வந்தால், உங்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படும், நாங்கள் சொன்னதைச் செய்வோம் என்றதை நம்பித்தான், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இப்போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரித்தான் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அடிப்படை கோரிக்கைகளுக்கு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அரசு, காவல்துறை அராஜகச் செயல்களைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டுவதற்குக் கூட தடை விதிக்கப்படுகிறது. பாஜக ஆளும் மாநிலங்களில்தான் காவல்துறையின் காட்டாட்சி நடக்கின்றது என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், ஜனநாயகம், சமூகநீதி விழுமியங்களுக்குப் பெயர் பெற்ற தமிழ்நாட்டிலும் காவல்துறையினரின் செயல்பாடானது, காவல்துறை தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளதா? எனச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மின் கட்டண உயர்வு, ஆசிரியர், அரசு ஊழியர்களின் சம்பளப் பிரச்சனை, ஒப்பந்த முறை, பழைய பென்சன் திட்டக் கோரிக்கை, தூய்மைப் பணியாளர்களை தனியார் நிறுவனங்கள் கைகளில் ஒப்படைப்பது என கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கைகள் அனைத்தும் காவிப்பாசிச எதிர்ப்பை கூர் மழுங்கிடச் செய்திடாதா? சமூகநீதி, ஜனநாயகம் காக்க, கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கைகளும் காவல்துறை அடக்குமுறைகளும் கைவிடப்பட வேண்டும். மக்கள் போராட்டங்களில், கிளர்ச்சிகளில் பொறுப்புள்ள அணுகுமுறையைக் கையாள வேண்டும். ஸ்டெர்லைட் ஆணையத்தின் பரிந்துரை, வாச்சாத்தி உயர்நீதிமன்றத் தீர்ப்புப் படி உயர் அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது சட்டவிரோத ஆட்சியாளர்கள், அதிகாரிகளுக்கு ஒரு எச்சரிக்கை யாகவும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் இருக்க வேண்டும். ❑

# வருணாசிரம முறைக்கு வலு சேர்க்கும் விஸ்வகர்மாத் திட்டம்

**வீ.சங்கர்**

*ஜூன் 1953. அன்றைய காங்கிரசின் தமிழ்நாட்டு முதல் அமைச்சர் திரு. ராஜாஜி அவர்கள் ஒரு கல்வித் திட்டத்தை அறிவித்தார். "மாற்றப்பட்ட திட்ட அடிப்படையிலான ஆரம்பக் கல்வி" என்ற பெயரில் அறிவித்தார். அதன்படி, காலை நேரம் முறையான வகுப்பறைக் கல்விக்காகவும் மதிய நேரம் மாணவர்கள் தங்கள் தந்தையரின் பாரம்பரியமான குலத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கும் என ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி, தோட்டியின் மகன் தோட்டி வேலையைத் தான் கற்றுக் கொள்ள வேண்டும். செருப்பு தைப்பவரின் மகன் செருப்பு தைக்கும் தொழிலைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். பூசாரியின் மகன் பூசாரியின் தொழிலைத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். இது மொத்த மாநிலத்தையும் ஆர்ப்பரித்து எழச் செய்தது. ஒரு ஆற்றல்மிக்க திராவிட அரசியல் எழுந்திடுவதற்கு வழிகோலியது. எதிர்க் கட்சிகள் மத்தியில் இருந்து மட்டுமல்லாமல், தனது சொந்த கட்சிகுள்ளிருந்தே ராஜாஜி கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி யிருந்தது. சாதிப் படிநிலைக்கு வலு சேர்க்கும் குலக் கல்வி முறையை ரத்து செய்திட வேண்டும் என்கிற கோரிக்கையின் தலைவராக மாநில காங்கிரசுக்கு உள்ளிருந்தே எழுந்து வந்தார் காமராசர். சர்ச்சைக்குரிய கல்வித் திட்டத்திற்கு எதிரான மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தால், மார்ச் மாதத்தில் மாநில காங்கிரஸ் தலைமைப் பொறுப்பில் இருந்து விலக வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளான ராஜாஜி, இறுதியில் 1954 ஏப்ரல் மாதத்தில் முதல் அமைச்சர் பதவியில் இருந்தே விலக வேண்டியதாகி விட்டது.*

*இப்போது, 2023ல் திருவாளர் மோடியும் பிஜேபியும் அதே நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். விஸ்வகர்மா பிறந்த நாளன்று, மோடியின் பிறந்த நாளன்று, பிரதம அமைச்சர் மோடியால் அறிவிக்கப்பட்ட விஸ்வகர்மா திட்டம் என்பது குலத் தொழிலைக் கற்பதற்காக ராஜாஜியால் உருவாக்கப்பட்ட குலக் கல்வித் திட்டத்தின் மறுபெயரே தவிர வேறு எதுவும் இல்லை.*

> பிரதம அமைச்சரின் விஸ்வகர்மா திட்டத்தில் கீழ்க்காணும் 18 பாரம்பரிய கைவினைத் தொழில்கள் இடம் பெறுகின்றன: கொல்லர், பொற்கொல்லர், தச்சர், மண்பாண்டம் செய்பவர், படகு செய்பவர், முடி திருத்துபவர், சலவைத் தொழிலாளி, தையல் தொழிலாளி, மீன்பிடி வலை செய்பவர், பூ மாலை கட்டுபவர், பொம்மை செய்பவர், கூடை முடைபவர், சிற்பி, பூட்டு தயாரிப்பவர், கல் உடைப்பவர், சுத்தி மற்றும் இரும்பு வேலை செய்பவர், செருப்பு தைப்பவர், பரம்பரை ஆயுதம் தயாரிப்பவர். இதர தொழில்கள் பின்னர் இணைக்கப்படும்.

ராஜாஜியின் கொச்சையான திட்டத்திற்குப் பதிலாக, சம்பளத்துடன் கூடிய பயிற்சி, இலவச தொழிற்கருவிகள், கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நாசூக்கான திட்டத்தை, சாதிய படிநிலையை நோக்கி கவர்ந்திழுக்கும் ஒரு திட்டத்தை, சாதிய முறைக்கு வலு சேர்க்கும் ஒரு திட்டத்தை, விஸ்வகர்மாத் திட்டம் என்கிற பெயரில் பிரதம அமைச்சர் மோடி அறிவித்து இருக்கிறார்.

**கைவினைஞர்கள்: தொழிலால் அல்ல, சாதியால் (பிறப்பால்)**

பொருள் உற்பத்திக்கான தொழிற் கருவிகள், கடன்கள் முதல் உற்பத்திப் பொருள் 'ப்ராண்ட்' உருவாக்குவது, விற்பனை செய்வது வரை அனைத்து விதங்களிலும் உதவி செய்வதாக மோடி தலைமையிலான பிஜேபி அரசு அறிவித்து இருக்கிறது. ஆனால்,

இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்த ஒருவர், தான் பரம்பரை பரம்பரையாக அதே தொழிலை செய்து வருபவன் என்பதை நிரூபித்தால் மட்டும்தான், அதாவது, வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தன் பிறப்பால், தன் சாதியால் அந்த தொழிலைச் செய்பவன் என்பதை நிரூபித்தால் மட்டும்தான், அவருக்கு அத்தகைய ஆதரவு வழங்கப்படும். பகுதி மட்டத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் இதர அதிகாரிகள் அவர்களது பிறப்பை, சாதியை, பாரம்பரிய தொழிலை உறுதி செய்தால் மட்டுமே அவர்களுக்கு அத்தகைய ஆதரவு வழங்கப்படும். கைவினைஞர்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் செய்பவர்கள் தங்களது சாதி அடிப்படையிலான தொழிலுக்குள் கட்டுண்டு கிடப்பதை உறுதி செய்வதற்கென, அதிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதற்கென, மிகவும் திட்டமிட்ட ரீதியில் உருவாக்கப்பட்ட சதித் திட்டமே இந்த விஸ்வகர்மாத் திட்டமாகும். ஆர்எஸ்எஸ்ஸின் கனவான, சாதி அடிப்படையிலான, வருணாசிரம முறையின் அடிப்படையிலான ஒரு இந்து ராஜ்யத்தை உருவாக்குவதை, நிலவுகின்ற சாதீய முறையை மனு ஸ்மிருதியின் அடிப்படையில் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சதியே அன்றி இது வேறல்ல.

இந்தத் திட்டத்தின் மீதான ஆர்வத்தை உருவாக்குவதற்காகவும், கைவினைஞர்கள், கைவினைப் பொருள் செய்பவர்கள் மத்தியிலான இளைய தலைமுறையை ஈர்ப்பதற்காகவும், மிக முக்கியமாக, அந்த இளைய தலைமுறையினர் தமது சாதித் தொழிலை விட்டு விலகிச் செல்வதைத் தடுப்பதற்காகவும்தான் ஒரு கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார் மோடி. ஐந்து நாட்கள் அடிப்படைப் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படும். அதை 18 மாதங்களுக்குள் திருப்பி செலுத்தி இருந்தால், 15 நாட்கள் முன்னேறிய பயிற்சி பெற்ற சான்றிதழ் பெற்றிருந்தால் மட்டுமே இன்னுமொரு இரண்டு லட்சம் கடனாக வழங்கப்படும். மொத்தம் 13 சதவீத வட்டியில் 8 சதவீதத்துக்கு அரசும், மீதம் 5 சதவீதத்துக்கு கடன் வாங்கியவர்களும் பொறுப்பாவார்கள். இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றிய மோடி, "கடனுக்கு உத்தரவாதம் மோடிதான்", எந்த வங்கியும் வேறு எந்த சொத்தையும் அடமானமாகக் கேட்காது என பெருமையுடன், புளகாங்கிதத்துடன் அறிவித்தார்.

நிகழ்ச்சி துவக்கத்தின் போது, "குரு சிஷ்ய பரம்பரை" எனும் பொருட்காட்சியின் ஊடாக மோடி இறுமாப்புடன் நடந்து சென்றது, விஸ்வகர்மாத் திட்டம் துவங்கப்படுவதன் உள்நோக்கத்தை, அதன் உட்பொருளைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தது.

## மூலதனம் மற்றும் சாதி முறையின் கலவை

நிலப்பிரபுத்துவத்தை, அதன் மிச்ச சொச்சங்களை முதலாளித்துவம் அழிக்கும் என்கிற வழமையான, பாரம்பரியமான புரிதலுக்கு மாறாக, இந்தியாவில் சாதிய முறைக்கு வலு சேர்ப்பதாக, அதன் பாதுகாப்பு அரணாக முதலாளித்துவம் உருமாறி இருக்கிறது. 1950களின் காலகட்டத்திலான ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை, குலத் தொழில் திட்டத்தை, 2023 நவதாராளவாத காலகட்டத்துக்கு பொருத்தமானதாக மாற்றி அமைத்து இருக்கிறார் பிரதம அமைச்சர் மோடி.

இந்தத் திட்டம் ஒரு நவதாராளவாத காலகட்டத்தில் அறிமுகப்படுத்தப்படுவதால், பயிற்சி மற்றும் தொழில் நுட்பங்களை வழங்குவதன் மூலம் உள்ளூர் கைவினைப் பொருட்களை உரக்க ஒலிப்போம் என்றும், கைவினைப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் உள்ளூரை உலகமயமாக்குவோம் என்றும் முழங்குகிறார் மோடி. அவற்றை பாரத மண்டபத்திலும் யஷோ பூமியிலும் காட்சிப் பொருளாக வைப்போம் என்கிறார். 25 லட்சம் கோடி மதிப்புள்ள சர்வதேச சந்தையைக் கைப்பற்றுவோம் என்றும், ஏற்றுமதியில் ஒரு சதவீதமாக மட்டுமே இருக்கும் கைவினைப் பொருட்கள் பங்கை அதிகரிப்போம் என்றும் உரைக்கிறார்.

நிகழ்வுகள், பொருட்காட்சிகள், கருத்தரங்கங்கள், மாநாடுகள் போன்றவற்றால் அறியப்படும், வளர்ந்து வரும் "மாநாடு சுற்றுலா" தொழில்துறை சந்தைக்கு வேண்டியவற்றை தயாரிக்க இருப்பதாக அதற்கு ஒரு நியாயம் கற்பிக்க, முலாம் பூச முயல்கிறார் மோடி. குளிர்சாதனப் பெட்டியில் இருந்து நீரெடுத்துக் குடிப்பதை விட மண்பானை நீரருந்த விரும்பும் பிரிவு மக்களை குறிவைத்து விற்பனையைப் பெருக்கப்போவதாக சொல்கிறார். நம் நாட்டு கைவினைஞர்களும் கைவினைப் பொருட்கள் செய்பவர்களும் பெரும் கார்ப்பரேட் கம்பெனிகளின் விற்பனைச் சங்கிலியின் ஒரு பகுதியாக, அந்த கம்பெனிகளின் ஒப்பந்த முறைச் சங்கிலியின் ஒரு பகுதியாக இருப்பார்கள்

என்பதை ஒளிவுமறைவில்லாமல் சொன்னார் மோடி. விஸ்வகர்மா திட்டத்தின் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க முயல்கிறார் மோடி. சாதி அமைப்பு முறையைக் கட்டிக்காப் பதும், நவதாராளவாத பொருளாதார காலத்தில் அதே சாதியை மூலதன திரட்சிக்குப் பயன் படுத்திக் கொள்வதும் மோடியின் இரண்டு முக்கிய நோக்கங்களாக இருக்கின்றன.

### தன்னந்தனியான திட்டம் அல்ல

விஸ்வகர்மா திட்டம் என்பது தன்னந் தனியான ஒரு திட்டம் அல்ல. மாறாக, அது நவதாராளவாத சூழலோடு, அதற்கு ஒத்திசைவானதாக, பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அது, கீழ் சாதிக்காரகள் கல்வி பெறுவது தண்டிக்கத் தக்கது என்கிற மனு ஸ்மிருதியால் உத்வேகம் பெற்ற, புதிய கல்விக் கொள்கை 2020 உடன் மிக நெருக்கமான தொடர்புடையது. அது விளிம்புநிலை மக்களுக்கு கல்வியை மறுக்கிறது. கல்விக்கான ஊடக மொழியின் மூலம் (தாய்மொழிக் கல்வியை மறுப்பதன் மூலம், இந்தியைத் திணிப்பதன் மூலம்), கல்வியை தனியாருக்கு தாரை வார்ப்பதன் மூலம் (கல்வியை எட்டாக் கனியாக்குவதன் மூலம்), தொழிற்கல்வியைப் புகுத்துவதன் மூலம் என பல வழிகளில் ஒடுக்கப்பட்டோருக்கு கல்வியை மறுக்கிறது. அது ஆர்எஸ்எஸ்-பிஜேபியின் இந்து ராஜ்ய கனவோடு ஒன்று கலக்கப்பட்டது. சட்டங்களைத் திருத்தியதன் மூலம் குடும்பத் தொழில்களில் (சிறு நிறுவனங்களில்) சிறுவர் உழைப்பு என்பது ஏற்கனவே சட்டரீதியாக செல்லத்தக்கதாக மாற்றப்பட்டு விட்டது.

### பிற்படுத்தப்பட்ட மக்களை சென்றடைகிறதா?

பிற்படுத்தப்பட்ட மக்களைச் சென்றடை வதற்கான மோடியின் திட்டம் இது என்கிறது என்டிடிவி எனும் தொலைக்காட்சி. பீகாரின் சாதிவாரியான கணக்கெடுப்பை தடுத்து நிறுத்திட உச்ச நீதிமன்றம் மறுத்ததன் பின்னணியில் இந்த திட்டம் துவங்கப்படுகிறது என்கிறது. எனவே, இந்த திட்டத்தின் மூலம் தனது பார்ப்பன-பனியா தோற்றத்தைக் கழற்றி விடுவதற்கான பிஜேபியின் திட்டமிது என்பது நமது விளக்க உரையாக அமைகிறது. இதை நிரூபிப்பது போல மோடியும் கூட சொல்கிறார், சேவை செய்யும் சாதிகள் இல்லாத கிராமம் ஒன்று கூட நாட்டில் கிடையாது என்கிறார். அதாவது, விஸ்வகர்மா என்று அழைக்கப்படும் முடி திருத்துபவர்கள், சலவைத் தொழிலாளர்கள், செருப்பு தைப்ப வர்கள், தோட்டிகள், தச்சர்கள், கொல்லர்கள், பொற்கொல்லர்கள் போன்ற சேவை செய்யும் சாதிகள் இல்லாத கிராமமே நாட்டில் கிடையாது என்கிறார்.

### ஒடுக்கப்பட்டோர் மீதான ஆதிக்கம்

தான் ஒரு ஏழையின் மகன் என்றும், ஒரு 'ஏழையின் மகன்' நாட்டில் உரிமை 'மறுக்கப் பட்டவர்களுக்காக' சேவகம் செய்வதாகவும் கூறிக் கொள்கிறார் மோடி. ஆனால், சொல்லாமல் மறைக்கப்படுவது என்னவென்றால், அந்த 'ஏழையின் மகன்' எந்த ஒரு ஏழையும் பணக்காரர் ஆவதை விரும்பவில்லை, தங்கள் சாதியை உதறி எறிந்து விட்டு சமூக சமத்துவம் பெறுவதை விரும்பவில்லை, தங்களுக்கு விருப்பமான எந்தத் தொழிலையும் தாமே சுதந்தரமாக தேர்வு செய்து கொள்வதை விரும்பவில்லை என்பதுதான். மாறாக, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்புகிறார். அடிமைத் தொழில்களால் விலங்கிடப்பட்ட அவர்களை சாதீய அடிமைகளாகவே இருத்திட முயற்சிக்கிறார். படிப்படியாக, மிகமிக மெதுவாக தளர்ந்துவரும் சாதீயக் கட்டமைப்பை இறுகச் செய்திட, உறுதிப்படுத்திட எத்தனிக் கிறார். தச்சர்கள், கொல்லர்கள், முடி திருத்து பவர்களின் மக்கள் தங்களது சாதித் தொழிலை, சாதியால் விதிக்கப்பட்ட தொழிலை, பரம்பரைத் தொழிலைத் தூக்கி எறிந்து விட்டு, தமது சாதிக்கு அப்பாற்பட்ட ஏதாவது ஒரு தொழிலை, ஒரு பொறியாளராகவோ, மருத்துவராகவோ, வேறு

> சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு என்பது, ஒரு எல்லைக்குட்பட்ட அளவிலேனும், பிரதிநிதித்துவத்தை உயர்த்தியது, சமூக நகர்வை மேம்படுத்தியது. சாதி அடிப்படையிலான கடன் மற்றும் பயிற்சித் திட்டங்கள் சாதிகளை அவர்களின் பரம்பரைத் தொழிலோடு கட்டுண்டு கிடக்கச் செய்கிறது. அதன் மூலம் சாதி அமைப்பு முறைக்கு வலு சேர்க்கிறது. கூடுதலான வேலைவாய்ப்பும் விரிவான இட ஒதுக்கீடும்தான் இன்றையத் தேவை.
>
> **தோழர் திபங்கர், பொதுச் செயலாளர், சிபிஐஎம்எல்**

ஏதேனும் ஒரு தொழில்முறையாளராகவோ மாறுவதை அனுமதிக்க மறுக்கிறார் அந்த ஏழையின் மகன் மோடி. அதுமட்டுமல்லாமல், அந்த சாதித் தொழிலை, பரம்பரைத் தொழிலை, கைவினைஞர்களை, கார்ப்பரேட்டுகள் சூப்பர் லாபம் ஈட்டுவதற்கான பலிகடாக்களாக ஆக்க விரும்புகிறார் என்பதுதான்.

1950களில் வருணாசிரம முறையைக் கட்டிக்காத்திட முயற்சித்த ராஜாஜி வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறியப்பட்டார். அவர் மீண்டும் எழவே முடியவில்லை. அன்றைய தினத்தின் ஜாம்பவானை கம்யூனிஸ்டு களும், பெரியாரிஸ்டுகளும் அன்றைய திராவிட இயக்கமும் குழிதோண்டிப் புதைத்தார்கள். மோடியும், ஆர் எஸ் எஸ் சும், பிஜேபியும் அதே விதியைத்தான் எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த நாட்கள் வெகுதொலைவில் இல்லை. ❑

## காசாவில் இனப்படுகொலை: யுத்தத்தை இஸ்ரேல் நிறுத்த வேண்டும்! ஹமாஸின் ராணுவ தாக்குதலை கண்டனம் செய்வது, பாலஸ்தீனியர்களை இஸ்ரேலின் அடிமைகளாக ஆக்கி இருப்பதை மன்னிப்பதாகி விடக்கூடாது! பாலஸ்தீனம் மீதான (இஸ்ரேலின்) போரை ஆதரிப்பதாகவும் ஆகிவிடக்கூடாது! அமைதி மற்றும் அரசியல் தீர்வுக்காக இந்தியா பாடுபட வேண்டும்!





இஸ்ரேல் மீது, அக்டோபர் 7 அன்று ஹமாஸ் நடத்திய திடீர் ராணுவ தாக்குதல், இஸ்ரேலிய உளவுத்துறை, அதன் பாதுகாப்பு கட்டமைப்புகள் பற்றி சொல்லப்பட்டிருந்த கட்டுக்கதைகளை அம்பலப்படுத்தி விட்டது. சமீபத்திய இஸ்ரேலின் வரலாற்றில் அதிகமான உயிர் சேதங்களை இத்தாக்குதல் ஏற்படுத்தி உள்ளது. சர்வதேச சமூகம் ஹமாஸின் தாக்குதலையும் அதன் கொடூர தன்மையையும் கண்டிக்கும் போது, காசா மக்கள் மீது இனப்படுகொலை யுத்தத்தை நடத்த இஸ்ரேல் அதையே தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளது. பாலஸ்தீனர்களை 'மனித மிருகங்கள்' என்று அழைத்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோங் காலண்ட், காசா மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம், மருத்துவ மனைகள், பள்ளிகள், வீடுகளை குறிவைத்து நடத்தும் குண்டு வீச்சுத் தாக்குதல் மட்டுமல்ல, உணவு, தண்ணீர், மின்சாரம், எரிசக்தி ஆகியவற்றை தடுத்து நிறுத்துவதாகவும் இருக்கும் என்று கூறியுள்ளார்.

ஜனநெருக்கடி மிக்க, திறந்த வெளி வதை முகாமாக உள்ள காசாவில் சிக்கி உள்ள 20 லட்சம் மக்களின் (அதில் சரி பாதி சிறுவர்கள்) உயிரைக் காப்பாற்ற சர்வதேச சமூகமும் ஐநா அமைப்பும் தலையிட வேண்டுமென வேண்டு கோள் விடுக்கிறோம். வெட்கக்கேடான விதத்தில் அமெரிக்க நிர்வாகமும் அதன் கூட்டாளிகளும் இஸ்ரேலுக்கான இராணுவ ஆதரவை மீண்டும் அதிகரித்துள்ளதானது போர்க் குற்றங்கள் புரிந்திட இஸ்ரேலுக்கு மேலும் தைரியமளிக்கிறது.

இஸ்ரேலிய பிணைக்கைதிகளின் நிலை குறித்துப் பரப்பப்படும், எளிதில் பற்றக்கூடிய போலிச் செய்திகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்குமாறும் வலியுறுத்துகிறோம். அவற்றில் சிலவற்றை, இந்தியாவிலிருந்து சங்கிகள் கும்பல்

பரப்பி வருகிறது என்பதும் வெளிப்படை யானதே. கடந்த காலங்களில் பிடிபட்ட ஒரு இஸ்ரேலிய ராணுவ வீரரை விடுவிப்பதற்காக, ஆயிரம் பாலஸ்தீனிய அரசியல் கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் தயாராக இருந்தது. அதிக எண்ணிக்கையில் இஸ்ரேலிய பிணைக் கைதிகளை ஹமாஸ் பிடித்துச் சென்றிருப்பதற்கு அந்த அனுபவம் கூட ஒரு காரணமாக இருக்கலாம். எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பலர் உட்பட அனைத்து அரசியல் கைதி களையும், பல்லாண்டு காலமாக சித்திரவதை செய்யப்பட்டு, இஸ்ரேலிய சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களையும் விடுவிக்க வேண்டும் என்பது மீண்டும் முக்கிய கோரிக்கையாக எழுந்திருக்கிறது.

ஹமாஸ் தாக்குதல் நடத்தியவுடன் நரேந்திர மோடி, இஸ்ரேலுக்கு ஒருமைப்பாட்டை உடனடியாக தெரிவித்துக் கொண்டார். ஆனால் காசா மீது இஸ்ரேல் இனப்படுகொலை யுத்தத்தை அறிவித்திருப்பது பற்றி அமைதி காக்கிறார். காலனிய ஆக்கிரமிப்பு மற்றும் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டிருக்கும் பாலஸ்தீனத்தின் மிக நீண்ட வரலாற்றையும், அந்த மக்கள் மீதான ஒடுக்கு முறை, உடமைப் பறிப்பு ஆகியவற்றையும் வைத்துப் பார்க்கும் போது, பாலஸ்தீனர்களின் இறையாண்மை கொண்ட சொந்த நிலப்பரப்புக் கான உரிமையை உயர்த்திப்பிடிக்கும் ஒரு அரசியல் தீர்வை அடைய உதவுவது மட்டும்தான் இந்தியாவின் ஒரே பங்காக, ஏற்றுக் கொள்ளத் தக்க பங்காக இருக்க முடியும். அது மட்டுமே அமைதிக்கான சாத்தியமான வழியும் ஆகும்.

இந்தியாவில் நடக்கும் பயங்கரவாத தாக்குதலும் இப்போதைய ஹமாஸின் தாக்கு தலும் ஒன்றுதான் என்பது போல காட்டிட பாஜக முயற்சிக்கிறது. மோடி அரசாங்கமும் பாஜகவும் பாலஸ்தீனியர்கள் மீது இழைக்கப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு மற்றும் குற்றங்கள் தொடர்பாக கண்ணை மூடிக்கொண்டுள்ளன. இந்தச் சூழ் நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இந்திய முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிரான வெறுப்புக் கனலை விசிறி விடுகின்றன. பாலஸ்தீனத்திற்கு ஒருமைப்பாடு தெரிவித்த காரணத்தினால் அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழக மாணவர்கள் மீது வழக்கு தொடுக்கப் பட்டிருக்கிறது. அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தை பயங்கரவாத மய்யம் என்று உத்தரப் பிரதேச அமைச்சர் ஒருவர் விவரித்திருக்கிறார். பாலஸ்தீனத்திற்கு ஒருமைப்பாடு தெரிவிப்பது என்பது பயங்கரவாதமாகவும் 'ஜிகாத்' என்றும் முத்திரை குத்தப்படுகிறது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்ற அதே சமயத்தில் தான் பாலஸ்தீனம் அடிமைப்படுத்தப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாலஸ்தீனியர்களின் நோக்கங்களுக்கு ஆதரவாக இந்தியா தொடர்ந்து குரல் கொடுத்து வந்துள்ளது. வாஜ்பாய் அரசாங்கமும் கூட பாரம்பரியமான இந்த இந்திய நிலைப்பாட்டை பின்பற்றியது. இஸ்ரேலின் போர்த்தந்திர கூட்டாளியாக இந்தியாவை மாற்றி அமைத்ததன் மூலம் இந்தியாவின் தொடர்ச்சியான இந்த கொள்கை அணுகுமுறையில் மோடி அரசாங்கம் பாரதூரமான மாற்றத்தை கொண்டு வருகிறது.

இஸ்ரேல் மீதான ராணுவத் தாக்குதலைக் கண்டிப்பது என்பது காசா மீதான, ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்கள் மீதான இனப்படுகொலை போரை மன்னிப்பதாகவோ அல்லது போரில் இஸ்ரேலோடு நிற்பதாகவோ சீரழிந்து போய் விடக்கூடாது. உடனடியாக வன்முறையை தணிப்பது, அமைதியையும் போர் நிறுத்தத் தையும் அமல்படுத்துவது என்பதாக இந்திய வெளியுறவு கொள்கை அமைய வேண்டும். அதே போல, இறையாளுமை மிக்க, சுதந்திர நாட்டுக்கான பாலஸ்தீனியர்களின் உரிமையை உயர்த்திப் பிடிக்கும் ஒரு அரசியல் தீர்வை அடைந்திட பணி செய்வதாக இந்திய வெளியுறவு கொள்கை அமைந்திட வேண்டும்.

**மத்தியக் கமிட்டி,**
**இககமாலெ) விடுதலை**


**மாலெ தீப்பொறி**

**மாதம் இருமுறை**

**2023 அக். 10 – 20**
**சந்தா சேர்ப்பு இயக்கம்**
**சந்தாதாரர் ஆகிடுவீர்!!**

**தனி இதழ் ரூ.10 : ஆண்டுச் சந்தா ரூ.200**

## சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும்! இட ஒதுக்கீடு விரிவாக்கப்பட வேண்டும்!

*பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நடத்தத் தவறி விட்டது மோடி அரசாங்கம். ஆனால், பீகார் அரசு முன்சென்று, மாநில மக்கள்தொகையின் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தியிருக்கிறது. சாதிவாரிக் கணக்கெடுப்பைத் தடுப்பதற்காக பாஜக எடுத்த தீவிரமான முயற்சிகளையும் முறியடித்து பீகார் அரசு சாதிவாரி கணக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. அந்த கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்களின் ஒட்டுமொத்த சாரம்சத்தையும் காந்தியின் 154வது பிறந்த நாளன்று பொதுவெளியில் வெளியிட்டுவிட்டது.*

*அந்தக் கணக்கெடுப்பின் சமூக-பொருளாதார விபரங்கள் கிடைக்கக் காத்திருக்க வேண்டும் என்றாலும்கூட, ஏற்கனவே வந்துள்ள கணக்கெடுப்பின் சுருக்கமானது பீகார் சமூகத்தில் உள்ள சாதி-சமுதாயக் கலவை குறித்த ஒரு ஆழமான பார்வையை நமக்கு வழங்குகிறது. சங்கப் பரிவாரத்தின் பரப்புரைகளில், அவர்களுக்கு மிகப் பிடித்தமான, முஸ்லீம் மக்கள்தொகை அளவின்றி அதிகரிக்கிறது என்பதும் வங்காளதேசத்தில் இருந்து ஊடுருவு கிறார்கள் என்பதும்தான் சுற்றிச் சுற்றி வருகிறது. சங்கிகளின் இந்தப் பரப்புரையை கணக்கெடுப்பு முற்றிலுமாக நிராகரிக்கிறது. முஸ்லீம் மக்கள்தொகையானது அதே 17 சதவீதத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறது எனவும் காட்டுகிறது.*

**கணக்கெடுப்பு வெளிப்படுத்திய சாதிவாரியான விவரங் களானது, நாடு தழுவியளவில் சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை மறுக்கவே முடியாத அளவிற்கு நம்பிக்கையூட்டுகிறது. அதன் மூலம் இட ஒதுக்கீடுக் கோட்பாடு அவசரமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் வழிவகுக்கிறது.**

*கணக்கெடுப்பு வெளிப்படுத்திய சாதிவாரியான விவரங் களானது, நாடு தழுவியளவில் சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை மறுக்கவே முடியாத அளவிற்கு நம்பிக்கையூட்டுகிறது. அதன் மூலம் இட ஒதுக்கீடுக் கோட்பாடு அவசரமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் வழிவகுக்கிறது. பீகாரில் மொத்த மக்கள் தொகையில் இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் 64 சதவீதம் என்றும் பொதுப் பிரிவினர் 16 சதவீதத்திற்கும் குறைவு எனக் கணக்கெடுப்பு காட்டுகிறது. ஆனால், இட ஒதுக்கீடு கொள்கையானது, இந்த எண்ணிக்கைச் சமன்பாட்டிற்கு முற்றிலும் முரணாக இருக்கிறது.*

*தற்போது இதர பிற்படுத்தப்பட்டோருக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கும் 27 சதவீத இட ஒதுக்கீடானது மொத்த இதர பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகையில் பாதிக்கும் குறைவாகவே உள்ளது. அதற்கு மாறாக, பொதுப் பிரிவினர் 10 சதவீத இட ஒதுக்கீட்டை உத்தரவாதமாக அனுபவித்து வருகின்றனர். (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு என்ற பெயரில் இது முழுவதும் பொதுப் பிரிவினருக்கானதாகவே உள்ளது. பொருளாதாரத்தில் நலிந்த பட்டியலினத்தவர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் இந்த ஒதுக்கீட்டில் உரிமை கோர முடியாது). இந்த 10 சதவீதத்தோடு, பொதுப் பிரிவு இடங்களையும் பெறுவதற்கான அளவற்ற வாய்ப்பை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள்.*

*2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சாதிவாரி தரவுகளையும்*

குறிப்பாக சமூக-பொருளாதார நிலைமைகள் பற்றிய தரவுகளையும் சேகரித்தது. ஆனால், அது வெளியிடப்படவில்லை. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படவேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பு அடுத்து 2021ல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மோடி அரசு அதைச் செய்யாமல் தன் கடமையிலிருந்து தவறிவிட்டது. அது புள்ளிவிவரங்களில் ஒரு மாபெரும் பின்னடைவையும் வெற்றிடத்தையும் ஏற்படுத்தி விட்டது. அது வளங்களை நியாயமான முறையில் ஒதுக்கீடு செய்வதையும் சமூக சமத்துவத்தை அடைவதற்கான உறுதியான நடவடிக்கையை மேற்கொள்வதையும் பாதித்து விட்டது. சாதிவாரியான கணக்கெடுப்பின் அவசியம் மற்றும் இடஒதுக்கீடு கொள்கையை பகுத்தறிவிற்கு உகந்ததாக மாற்றியமைக்க வேண்டிய தேவை குறித்து இதை விடவும் அழுத்தமாக கூறிட முடியாது.

இட ஒதுக்கீட்டு கொள்கையின் இந்த முரண்பட்ட தன்மையை வைத்துக் கொண்டு மோடி வித்தை காட்டிக் கொண்டிருக்கிறது பாஜக. பட்டியலின மக்கள், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் பெரும் பிரிவினர் இட ஒதுக்கீட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட யதார்த்தம், பரவலாக உள்ள பொதுப்புத்தி ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, இட ஒதுக்கீடு கோருபவர்களைத் துண்டாடும் ஒரு வக்கிரமான “சமூக பொறியியல்” முன்மாதிரியை பாஜக உருவாக்கியது. இட ஒதுக்கீட்டிற்கு தேவையான இடங்களை விரிவாக்குவது, அதிகரிப்பது, அதன் அமுலாக்கத்தை மேம்படுத்துவது என்பதற்கு மாறாக, பல்வேறு குழுக்களை முன்நிறுத்துவது, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களை உள்வாங்கிக் கொள்வது என்னும் அடிப்படையில் பாஜகவின் சமூக பொறியியல் முன்மாதிரி செயலாற்றுகிறது. சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற கூட்ட சிறப்புத் தொடரின் போது உயர் அதிகாரிகள் மட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் இல்லை என்று சுட்டிக்காட்டிய விவாதத்தின் போது, பாஜகவில் எத்தனை பிற்படுத்தப்பட்ட எம்பிக்கள், எம்எல்ஏக்கள் இருக்கிறார்கள் என்பதைப் பற்றிப் பேசி அந்த விவாதத்தை அடக்க முயற்சித்தார் அமித்ஷா.

மோடி ஒரு பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த பிரதமர், முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஒரு பட்டியல் சமூகத்தவர், தற்போதைய ஜனாதிபதி திரௌபதி முர்மு ஒரு பழங்குடியினத்தவர் என கூறி அவர்களைக் காட்சிப் பொருளாக்கும் பாஜக, அந்தப் பிரிவு மக்களுக்கு அதிகாரம் வழங்கி இருப்பதன் சின்னமாக அவர்களைக் காட்டிக் கொள்ளும் பாஜக, பட்டியல், பழங்குடி மக்கள், பிற்படுத்தப் பட்டோருக்கு அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கி இருப்பதாக பீற்றிக்கொள்ளும் பாஜக, இட ஒதுக்கீட்டு முறையைப் பின்னுக்குத் தள்ளுவதில் எல்லா வழிகளிலும் மும்முரமாகவே இருந்து கொண்டிருக்கிறது. இப்போது இருக்கும் இடஒதுக்கீடு கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் மிகப்பெரிய பின்னடைவுகளும் ஓட்டைகளும் இருக்கும் போதிலும்கூட, இடஒதுக்கீட்டை ஓரம்கட்டி வைத்து விட்டு அதைத் தாண்டி முன் செல்லும் வழியைக் கண்டறிந்திருக்கிறது பாஜக. உயர் அதிகாரிகளை நேரடியாக வேலைக்கு அமர்த்தும் (lateral entry) கொள்கையின் மூலம், ஆர்எஸ்எஸ்ஸின் கருத்தியல் மேலாண் மையையும், சலுகைபெற்ற சமூகப் பிரிவினரின் ஆதிக்கத்தையும் உத்தரவாதம் செய்யும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக் கொண்டு அதிகாரவர்க்கத்தின் உயர் மட்டம் நிரப்பப்பட்டிருக்கிறது. கண்மூடித்தன மான தனியார் மயமாக்கம் தடையேதுமின்றி விரிவாக்கப்படு வதனால், வழக்கமாக கிடைக்க வேண்டிய அரசு வேலைவாய்ப்பு என்பது அருகிப் போய்விட்டது. உயர் கல்வி அரங்கத்திலிருந்து திட்டமிட்ட விதத்தில் வெளியேற்றப்படுவதன் மூலம் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் வாய்ப்பு பெறும் திறன் பலவீனப்படுத்தப்படுகிறது.

பெண்கள் இடஒதுக்கீடு பிரச்சனையில் பாஜக ஆடிய அருவருக்கத்தக்க அரசியல் ஆட்டம் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயிருக் கிறது. சங்கப் பரிவாரத்தின் கருத்தியல், அரசியல் சதியாகிய, மனுவாத கருவுக்கு சவால் விட வேண்டிய தேவையை பீகார் சாதிவாரி கணக் கெடுப்பு அடிக்கோடிட்டுக் காட்டி இருக்கிறது. நாடு தழுவிய சாதிவாரி கணக்கெடுப்பு, இடஒதுக்கீடு கட்டமைப்பை விரிவானதாக்கிட வழிவகுத்திடும். மேலும் பொதுத்துறை புதுப் பித்தலை உத்தரவாதப்படுத்தக்கூடிய, மறுதிசை வழிப் படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கை மற்றும் கல்வியை, சுகாதாரத்தை தனியார்மய மாக்கும் கொள்கைகளை முற்றிலுமாகக் கைவிடுவது ஆகியனதான், இந்திய நாட்டின் கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் தங்கள் சமூக நீதியை, பொருளாதார நீதியை வென்றெடுத்து முன்செல்வதற்கான பாதையாக இருக்கும். மோடி ஆட்சியை அரியணையிலிருந்து அகற்றுவது மட்டுமே, இத்திசைவழியில் செல்வதற்கான முதல் தீர்மானகரமான நடவடிக்கையாகும். ❑

# ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும்!

**கே.ஜி.தேசிகன்**

*முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளில் கிட்டத்தட்ட நூறு சதவீதத்தை நிறைவேற்றி விட்டதாக சொல்லிக் கொண்டிருக்கும்போது, தலைநகர் சென்னை ஆசிரியர்கள், செவிலியர்களின் போராட்டக் களமாகக் காட்சியளிக்கிறது. நவதாராளவாதக் கொள்கைகளை அமல்படுத்தும் எந்த அரசும் தொழிலாளர்கள், ஊழியர்கள், விவசாயிகளின் போராட்டத்தைச் சந்தித்தே ஆக வேண்டும். நன்கு கட்டமைக்கப் பட்டத் தொழிற்சங்கங்களை கொண்டிருக்கிற ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் போராட்டக் களத்துக்கு மீண்டும் மீண்டும் வருகின்றனர்.*

*ஏற்கனவே ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்டதால் ஆயிரக்கணக்கானோர் பழிவாங்கப்பட்டு, கிட்டத்தட்ட 1.50 லட்சம் பேர் பணிநீக்கம் செய்யப்பட்டனர். ஆட்சி மாற்றத்திற்கு பிறகு அத்தனையும் திரும்பப் பெறப்பட்டது. இப்போது கூட முதலமைச்சர் ஸ்டாலின் இவற்றையெல்லாம் நினைவுபடுத்திப் பேசியிருக்கிறார். தாங்கள் அப்படியெல்லாம் கொடூரமாக நடந்து கொள்ளவில்லை என்றும் சொல்லி இருக்கிறார். கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதினாலோ அல்லது கோரிக்கைகள் பற்றி அரசுக்குப் பரிந்துரைக்க கமிட்டி ஏற்படுத்தப்படுவதினாலோ என்ன பயன் என்கிறார்கள் ஆசிரியர்கள். தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று திமுக வாக்குறுதி கொடுத்த காரணத்தால் அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். இரண்டரை ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் முடிந்து விட்ட நிலையில் வாக்களித்த ஆசிரியர்கள், ஊழியர்களிடம் எதிர்பார்ப்பு இருப்பது நியாயமானது. அரசியல் தளத்தில் பாஜக எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு, மதவாத எதிர்ப்பு என்பது தமிழக மக்களுக்கு உகந்தது தான். ஆனால், பொருளாதாரத் தளத்தில் பாஜக பின்பற்றும் அதே கொள்கைகளை திமுகவும் பின்பற்றும்போது, பாஜக எதிர்ப்பில் திமுகவின் நிலைப்பாட்டை, உறுதிப்பாட்டை கேள்விக்குள்ளாக்கும்.*

*பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்வதற்கு ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்களின் பங்களிப்பு முக்கியமானது. அவர்கள்தான் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்பவர்கள். அதேபோல் அவர்களால்தான் சமூகத்தில் கருத்துருவாக்கத்தையும் செய்ய முடியும். வலுவான சங்கங்கள் காரணமாக உருவான கூட்டுப் பேர ஆற்றலால் ஊதியக் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஊதிய உயர்வு பெற்றார்கள். சில துறைகளில் ஊதிய முரண்பாடுகள் இருந்தாலும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றனர்.*

**பழைய பென்ஷன் திட்டம் என்ற தேர்தல் வாக்குறுதி:**

அரசு ஊழியர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை உருவாக்கிய இந்த அறிவிப்பு திமுகவுக்கு தேர்தலில் மிகவும் சாதகமாக அமைந்தது. ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் பழைய பென்ஷன் திட்டத்தை செயல்படுத்துவோம் என அறிவித்துவிட்ட பின்னணியில் தமிழகத்தில் தேர்தல் வாக்குறுதியை செயல்படுத்திட திமுக அரசு கடப்பாடு கொண்டுள்ளது. மாதச் சம்பளதாரர்கள் ஓய்வூதியதாரர்களிடம் இருந்து தட்டிப்பறித்து பொருளாதாரத்தை சீரடைய செய்ய முடியாது என்பதை திமுக அரசு உணர வேண்டும்.

இதே நிலை தொடர்ந்தால் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் ஆகப்பெரிய எதிர்ப்பை திமுக அரசு சந்திக்க வேண்டியிருக்கும்.

### தற்போதைய ஆசிரியர் போராட்டங்கள்:

ஆசிரியர்கள் மத்தியில் கோரிக்கைகள் நீறு பூத்த நெருப்பாக இருந்து கொண்டிருக்கிறது. ஒரே கல்வித் தகுதியோடு ஒரே வேலை செய்யும் இடைநிலை பணி மூப்பு ஆசிரியர்களுக்கு இடையிலான ஊதிய வித்தியாசம் களையப்பட வேண்டும் எனக் கோரி அவர்கள் சென்னை பள்ளிக் கல்விதுறைத் தலைமையகத்தின் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜூன் 1, 2009க்கு பின் பணியில் சேர்ந்தவர்கள் மே 31, 2009 வரை பணியில் சேர்ந்தவர்களை விட ரூபாய் 3000க்கும் மேல் குறைவாக ஊதியம் பெற்று வருகிறார்கள். ஒரு நாள் வித்தியாசத்தில் 3000 ரூபாய் வேறுபாடு சரியானது அல்ல என்பதை முதலில் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக மூன்று பேர் கொண்ட கமிட்டி போட்டு பரிசீலனை என்று இழுத்தடிப்பதை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

2013 ஆம் ஆண்டு டெட்(TET) தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இதுவரை பணிக்கமர்த்தப்படவில்லை. சென்ற எடப்பாடி அரசு அரசாணை 149 மூலம் இன்னொரு போட்டித் தேர்வு எழுத வேண்டும் என்று சொன்னது. அதே வளாகத்தில் அதே காலகட்டத்தில் அவர்களும் இரவு பகலாக போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அதுபோல் பல்நோக்கு திறன் வளர்ப்பு என்ற பெயரில் 2012 முதல் பகுதி நேர ஆசிரியர்களாக ஓவியம், கணினி, தோட்டக்கலை, தையல், உடற்கல்வி, இசைப் பயிற்சி போன்ற பல பிரிவுகளில் பதிவு நேர ஆசிரியர்களாக 12,000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். ரூ.5,000 ஊதியத்தில் பணிக்கமர்த்தப்பட்டவர்கள் இப்போது ரூ.10,000 பெறுகின்றனர். குறைந்தபட்ச ஊதியம் ரூ.25,000 என்பதும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதும் அவர்களது கோரிக்கை. தற்போது போராட்டத்தின் காரணமாக ரூ.2,500 ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அது போதுமானதல்ல என்கிறார்கள். தற்காலிகமாக போராட்டத்தைத் திரும்பப் பெற்றுள்ளனர்.

இந்த மூன்று பிரிவு ஆசிரியர்களின் போராட்டமும் தொடர்ந்து வந்த நிலையில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் வாக்குறுதி களை, அரசாங்கத்தின் அறிவிப்புகளை ஏற்காத நிலையில் திமுக அரசாங்கம் காவல்துறை கொண்டு பெண், குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் அப்புறப்படுத்தியது. அதிகாலை நேரத்தில் குண்டுக் கட்டாகத் தூக்கி, கைது செய்து சமுதாயக்கூடங்களில் அடைத்தது. ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளின் நியாயம் காரணமாகவே அத்தனை இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரவு பகலாக குழந்தைகளுடன் காத்திருந்தனர். பலர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

கோரிக்கைகளின் நியாயத்தை, போராட் டத்தின் தீவிரத்தை உணர்ந்து செயல்பட்டிருக்க வேண்டிய அரசு, ஜனநாயக விரோதமாக ஒடுக்கு முறையைக் கையாண்டது ஏற்றுக்கொள்ள முடியாதது. கண்டிக்கத்தக்கது.

ஜெயலலிதா ஆட்சியில் எப்படியெல்லாம் ஒடுக்குமுறை ஏவப்பட்டது என்று அமைச்சர் பெருமக்கள் பேசுவதற்கு பதிலாக ஆசிரியர்களின் நம்பிக்கையை பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவது அவசியமானது.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்ட அறிவிப்புக்கு பின் சமரசம்

அடுத்ததாக எண்ணும் எழுத்தும் திட்டம், எமிஸ் இணையதள பதிவேற்றம் என்று ஆசிரியர் பணி அல்லாத பல பணிகள் கொடுக்கப்படுவ தால் தங்களால் மாணவர்களுக்கு கல்வியைக் கற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்த முடியவில்லை என்று சொல்லி அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போர்க்கொடி உயர்த்தி இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு தொடக்கக் கல்வி சிறப்பாக இருக்க வேண்டியது அவசியம். ஆதாரமான தொடக்கக் கல்வியில் ஆசிரியர்களின் கவனம் இருப்பதும் முக்கியம். தமிழகம் கல்வியில் பின்தங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு திமுக அரசுக்கு இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கல்வித்துறை அதிகாரிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையில் 30 கோரிக்கைகளில் எமிஸ் இணையதள பதிவு வேலையில் இருந்து ஆசிரியர்களுக்கு விலக்கு அளிப்பது உட்பட 12 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

### மதுரையில் நடைபெற்ற ஆசிரியர்கள் கோரிக்கை மாநாடு

மதுரையில் மக்கள் கல்விக் கூட்டியக்கம் நடத்திய கோரிக்கை மாநாடு சுயநிதிக் கல்லூரி கௌரவ விரிவுரையாளர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கையை வெளி உலகத்திற்கு கொண்டு

**மருத்துவ பணியாளர் தேர்வு வாரிய செவிலியர்களுக்கு அரசு வஞ்சனை:**

சென்னை மருத்துவ இயக்குனரகம் முன்பு போராட வந்த ஆயிரக்கணக்கான செவிலியர்கள் ஒரே நாளில் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்டனர். ஆசிரியர்கள் போராட்டம் ஒரு வார காலத்திற்கு மேலாக நீண்டதால் இதை அனுமதித்து விடக்கூடாது என்பதில் காவல்துறை கண்ணும் கருத்துமாக இருந்தது.

பொது சுகாதாரக் குறியீட்டில், மக்கள் தொகையை கட்டுக்குள் வைப்பதில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ செவிலியர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். மக்கள் தொகை விகிதாச்சாரத்துக்கு ஏற்ப செவிலியர்கள் நியமனம் இல்லை. தமிழகத்தில் 17,000 செவிலியர் காலிப்பணியிடங்கள் இருக்கும்போது கொரோனா காலத்தில் அவசர தேவைக்காக எடுத்த 2,500 செவிலியர்கள் இரண்டு ஆண்டுகள் பணி முடித்த பின்பு வேலையில்லை என்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். நிரந்தர பணியில் இருக்கும் செவிலியர்களுக்கு ரூபாய் 48,000 ஊதியமாக இருக்கும் போது தொகுப்பூதியத்தில் பணியாற்றும் அதே வேலை செய்யும் செவிலியருக்கு ரூபாய் 18,000 மட்டுமே வழங்கப்படுகிறது. செவிலியர்களின் ஆதாரமான பல கோரிக்கைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. உழைக்கும் பெண்களின் மேம்பாடு பெரியார் வழியில் ஆட்சி செய்யும் திராவிட மாடலின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும். உயிர்காக்கும் சேவை துறையில் லாப நஷ்ட கணக்கு பார்க்கக் கூடாது.

*வந்திருக்கிறது. பல்வேறு ஆசிரியர் பெருமக்களின் கோரிக்கைகளை இணைத்து வெளியீடும் கொண்டு வந்திருக்கிறது. ஆசிரியர், மாணவர், பெற்றோர், கல்வியாளர்கள், தொழிற்சங்க தலைவர்கள் என சகலரையும் இணைக்க முயற்சி எடுத்திருக்கிறது. பகுதி நேர அரசுப் பள்ளி ஆசிரியர் பணி நிரந்தரம், கௌரவ விரிவுரையாளருக்கு யுஜிசி ஊதியம் ஆகியவை முக்கிய கோரிக்கைகள் ஆகும். கோரிக்கைகளை சாத்தியப்படுத்த அடுத்தடுத்த நடவடிக்கைகள் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.*

# அதிகாரத்தின் முன், நேருக்கு நேராக உண்மையைப் பேசுவது இதழியல் நெறிதானே தவிர பயங்கரவாதம் அல்ல!

*அக்டோபர் 3, விடிகாலையில் நியூஸ் கிளிக் இணையதள ஏட்டோடு தொடர்புடைய 50க்கும் மேற்பட்ட இதழியலாளர்கள் மற்றும் அதன் ஊழியர்கள் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனைகள் (ரெய்டுகள்) இந்தியாவிலுள்ள விமர்சனபூர்வமான ஊடகக் குரல்களின் மீது தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதலாகும். டெல்லியின் பல இடங்களில் நடந்த சோதனைகளுக்கு முன்னால், தெலுங்கானாவின் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மீதும், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மீதும் அதே போல சோதனைகள் தேசிய புலனாய்வு முகமையால் (என்ஐஏ) நடத்தப்பட்டிருக்கிறது. நியூஸ் கிளிக் நிறுவன ஆசிரியர் பிரபீர் புர்கயஸ்தாவும் சீனியர் நிர்வாகி அமித் சக்கரவர்த்தியும் மிகக் கொடூரமான ஊபா (யூஏபிஏ) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர். அதைத் தொடர்ந்து கலால்துறையில் ஊழல் என காரணம் கூறி ஆம் ஆத்மியின் ராஜ்யசபா எம்பி சஞ்சய் சிங் கைது செய்யப்பட்டு இருக்கிறார். திமுகவின் ஜெகத்ரட்சகன் நிறுவனங்களிலும் வீடுகளிலும் வருமான வரி சோதனைகள் நடத்தப்பட்டு இருக்கின்றன. இந்த அனைத்து சோதனைகளையும் சேர்த்துப் பார்த்தோமேயானால், இதற்கு முன்னால், பீமா கொரேகான் வழக்கிலும், டெல்லி கலவர வழக்கிலும் எப்படி தொடர் கைதுகள் நடந்தனவோ, அதே போல இது இன்னும் மிக விரிவானதான, மிக மோசமானதான புதியதோர் ஒடுக்குமுறை கட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.*

*பீமா கொரேகான் வழக்கு போலவே, நியூஸ் கிளிக்கிலும் டிஜிட்டல் சாதனங்கள் சட்ட விரோதமாக கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. பெகாசஸ் போன்ற உளவு மென்பொருட்கள் அவற்றில் பதிவிடப்படும் என்பதை மறுப்பதற்கில்லை. சோதனைகள் நடத்தப்பட்ட விதம், நியூஸ் கிளிக்குக்கு எதிராக முதல் தகவல் அறிக்கையில் ஊபா பயன்படுத்தப்பட்டு*

இருப்பது, திட்டமிட்டு உருவாக்கப்படும் சொல்லாடல்கள், கதைகள் இவை எல்லாம் ஒரு மிகப்பெரும் சதியை சுட்டுவதாக இருக்கின்றன. அதிகாரத்தின் முன்னால் நேருக்கு நேராக உண்மை பேசும் இதழியல் நெறியை கிரிமினல் குற்றமாக சித்தரிப்பதற்கான, பயங்கரவாதமாக சித்தரிப்பதற்கான மிகப்பெரும் சதியைச் சுட்டுவதாகவே இருக்கின்றன. அத்தகைய உண்மையான இதழியல், வெளிநாட்டு நலன்களால் உந்தப்பட்டதாகவும் தேச விரோத நோக்கம் கொண்டதாகவும் கற்பிக்கப்படுகிறது. விவசாயிகள் இயக்கம், சிஏஏ எதிர்ப்பு இயக்கம் குறித்து எழுதியதற்காக, மதவெறி வன்முறையை, கோவிட் பெருந்தொற்றை அரசு சரியாக கையாளத் தவறியதை அம்பலப்படுத்தியதற்காக இதழியலாளர்கள் விசாரணைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். விவசாயிகள் இயக்கம், இந்தியப் பொருளாதாரத்தை சிதைப்பதற்கான, குலைப் பதற்கான ஒரு சதியாக மீண்டும் முன்வைக்கப் படுகிறது. இத்தகைய சொல்லாடல், அனுமதிக்கப்பட்ட இதழியல் என்பது அரசாங்கப் பிரச்சாரம் மட்டுமே என்பதாக அதை சுருக்குகிறது. விமர்சனம் என்பதை தேசத் துரோகத்துக்கு, பயங்கரவாதத்துக்கு இணையான தாக மாற்றுகிறது.

சாங்காயில் இருக்கும் ஒரு அமெரிக்க கோடீசுவரருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிநாட்டு பிரச்சாரத் தளங்களுக்கும், சீன அரசுக்கும் இடையிலான உறவு பற்றி நியூயார்க் டைம்ஸ் ஏட்டில் ஒரு கட்டுரை வெளியானதைத் தொடர்ந்து நியூஸ் கிளிக்கிற்கு எதிரான முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது. நெவில் ராய் சிங்கம் எனும் அந்த சர்ச்சைக்குரிய அந்த அமெரிக்க கோடீசுவரர், சோசலிச கருத்தின்பால் நம்பிக்கை கொண்டவராகவும் பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் முற்போக்கு வட்டாரங்களோடு சர்வதேச நிதி தொடர்பு உடையவராகவும் உள்ள ஒரு மென்பொருள் தொழில்முனைவோர் என சித்தரிக்கப்படுகிறார். இந்த நிதியுதவி வலைப் பின்னலின் பயனாளியாக நியூஸ் கிளிக் சித்தரிக்கப்படுகிறது. நியூஸ் கிளிக் வெளிநாட்டு நேரடி முதலீடு விதிகளை மீறியதாக ஆகஸ்ட் 2020ல் பொருளாதார குற்றப் பிரிவு ஒரு வழக்கு தொடர்ந்து இருக்கிறது. பிப்ரவரி 2021ல் அமுலாக்கத் துறை இயக்ககம் அந்த வளாகத்தை சோதனை செய்து இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாவற்றையும் நியூஸ் கிளிக் மறுத்திருக்கிறது. அனைத்தும் சட்டப்படியான, சட்டத்திற்குட்பட்ட வரவு செலவுகளே என உறுதிப்படுத்தி இருக்கிறது. ஆனால் இப்போது, நியூயார்க் டைம்ஸ் கட்டுரையை ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டு, அதன் மீது ஊபா வழக்கு புனையப் பட்டிருக்கிறது. நியூஸ் கிளிக்கின் இதழியல் உள்ளடக்கத்தை, சீன நிதியுதவி, சீனக் கம்பெனிகளின் கைவரிசை என்ற பெயரில், சீனத்தின் நோக்கங்கள் மற்றும் பிரச்சாரங்களோடு தொடர்புபடுத்த முயற்சிப்பது இந்தியாவின் சுதந்திர இதழியல், கட்டற்ற ஊடகம் என்கிற ஒரு கருத்துக் கோப்பையே அசிங்கப்படுத்தும் ஒரு அருவருப்பான சதியேயன்றி வேறல்ல.

நியூஸ் கிளிக் ஏட்டையும், இப்போது விவசாயிகள் இயக்கத்தையும் கூட சீனத்தின் சதி என்றும், வெளிநாட்டு உதவி பெறும் பயங்கரவாதம் என்றும் புனைய முயற்சிக்கும் மோடி அரசாங்கம், இந்திய சீன எல்லைப் பிரச்சனை குறித்தும், உண்மையான கட்டுப்பாடு எல்லைக் கோட்டில் இந்தியா தனது கட்டுப்பாட்டை இழந்து நிற்பது குறித்தும் முற்றிலும் மவுனம் சாதிக்கிறது. சீனத்துடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் கைபேசிகளின் சந்தையில் சீனத்தின் பங்கு விரிவாகிக் கொண்டே வருகிறது. சீனக் கம்பெனிகளின் மீது நிதி முறைகேடு, வரி ஏய்ப்புக் குற்றச்சாட்டுகள் இருக்கிறபோதிலும் தொடர்ந்து முக்கிய பல விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு, பெரிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு, பிஎம் கேர்ஸ் நிதிக்கும் கூட அவை நிதியுதவி அளித்து வருகின்றன. சீன கம்பெனிகளிடமிருந்து விளம்பரங்கள் பெறுவது பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் ஒரு தேசவிரோத செயல் என்றால், அதற்கு முதல் குற்றவாளியும், பொறுப்பும் இந்திய அரசாங்கமே ஆகும்.

மோடி அரசாங்கத்தின் சுயதம்பட்ட பிரச்சாரத்தை எதிரொலிக்க மறுக்கிற, மாறாக, அதிகாரத்திற்கு எதிராக, இதழியல் கோட்பாடு களைக் கடைபிடித்து ஆய்வு செய்து, துல்லியமாக உண்மை பேசுகிற ஊடகக் குரல்களை தண்டிப்பதற்காகத்தான், அதன் குரல்வளையை நெறிப்பதற்காகத்தான் சீனப் பிரச்சாரம் என்கிற பூதம் கிளப்பப்படுகிறது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவின் பெரும் பான்மையான பிரதான நீரோட்ட ஊடகங்களை அரசாங்கத்தின் பிரச்சார ஊதுகுழல்களாக மோடி

அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டு மாற்றி விட்டது. இதில் இந்தியாவின் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களின் சதியும் அடங்கி இருக்கிறது. மிகச் சமீப காலம் வரை சாதாரண மக்களின் பற்றியெரியும் பிரச்சனைகளைக் காட்டி வந்த என்டிடிவி போன்ற தொலைக்காட்சி நிறுவனத்தை அதானி குழுமம் வாங்கியதும், அதைத் தொடர்ந்து அது பெற்றிருக்கும் மாற்றமும் இதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆகும்.

இது பெரிய ஊடக நிறுவனங்களின் மதிப்பை அரித்துப்போகச் செய்திருக்கிறது. செய்தி சேகரிப்பதற்காக, பகுப்பாய்வுகளுக்காக, சமூக ஊடகங்களையும் இணையதளங்களையும் நோக்கி படையெடுப்போர் எண்ணிக்கை நாளுக்குநாள் பன்மடங்கு பெருகி வருகிறது. விவசாயிகள் இயக்கம் மூன்று கார்ப்பரேட் ஆதரவு வேளான் சட்டங்களை தூக்கியெறிந்தது மட்டுமல்ல, விவசாயத்தை கார்ப்பரேட்டுகள் கைப்பற்றுவதை முறியடித்தது மட்டுமல்ல, 'அரச ஆதரவு ஊதுகுழல் ஊடகங்களையும்' கூட தெட்டத் தெளிவாக நிராகரித்து இருக்கிறது. மாறிவரும் ஊடகச் சூழல் பற்றி மோடி அரசாங்கம் மிக நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறது. அதனால்தான், இணைய தளத்தில் நிலவும் சுதந்திர ஊடக வெளியை சிதைப்பதற்காகவும் நசுக்குவதற்காகவும் மூர்க்கத்தனமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய இந்தியாவில் மக்கள் ஆதரவு ஜனநாயக ஆதரவு ஊடகங்களுக்கு மிச்சம் மீதி இருக்கும் வெளியையும் அடைத்து விட வேண்டும், நசுக்கிவிட வேண்டும் என்றுதான் மோடி அரசாங்கம் இரு முனை கொண்ட ஊடக நிர்வாகத் தந்திரத்தை வகுத்திருக்கிறது. ஒரு புறம், சமூக ஊடகத்தில் செல்வாக்கு செலுத்துகிற தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரோடு வெளிப்படையாக கூட தனது உறவை அதிகரித்து வருகிறது. மற்றொரு புறம், சுதந்திர இதழியலாளர்களைப் பழிவாங்கும் இயக்கத்தைத் தீவிரப்படுத்துகிறது. ஊடகங்களை தண்டிப்பது, நசுக்குவதோடு கூடவே, ஒட்டுமொத்த இடதுசாரி, முற்போக்கு மற்றும் மக்கள் ஆதரவு நோக்கங்கள், இயக்கங்களை, வெளிநாட்டு நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், வெளிநாட்டு நிதியுதவி பெறும் 'தேசவிரோத சதியாக' சித்தரிக்க முயற்சிப்பது மோடி அரசின் சதித்திட்டமாக இருக்கிறது.

மோடி அரசின் இந்தச் சதியை ஊடகவியலாளர்களும் அறிவாளிகளும் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், இந்திய ஜனநாயக வெளியின் ஒவ்வொரு அங்குலத்தையும் காத்திட வேண்டுமானால், துன்புறுத்தப்படும் இதழியலாளர்கள், செயல்பாட்டாளர்களுக்கு ஆதரவாக இந்திய பொதுமக்கள் ஒவ்வொருவரும் எழுந்து நின்று உறுதியாக கரம் கோர்த்திட வேண்டும். ❑

## பத்திரிகை சுதந்திரத்தையும் பத்திரிகையாளர்களையும் நசுக்கும் மோடி ஆட்சியைக் கண்டித்து

*பத்திரிகை சுதந்திரத்தையும் பத்திரிகையாளர்களையும் நசுக்கும் மோடி ஆட்சியைக் கண்டித்து நடத்தப் பட்ட நாடு தழுவிய அக்.9–15 ஒருவார எதிர்ப்புக் கிளர்ச்சி ஆர்ப்பாட்டம் கறம்பக்குடியிலும் கரூரிலும் நடத்தப்பட்டது. மோடி ஆட்சி, பாலஸ்தீனத்துக்கு ஒருமைப்பாடு தெரிவித்து, போரை நிறுத்தி அமைதியைக் கொண்டுவர குரலெழுப்ப வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. கறம்பக்குடி ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் வளத்தான், மாநிலக்குழு உறுப்பினர் ரெங்கசாமி, முற்போக்கு பெண்கள் கழக மாவட்டச் செயலாளர் மணிமேகலை, கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளர் ஜோதி, ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளர் ஜீவா, மத்திய கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் ராமச்சந்திரன், கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினர் அந்தோணிமுத்து, மாநிலக்குழு உறுப்பினர் பொன்னுதுரை, ஏஐசிசிடியு செயலாளர் பால்ராஜ், முற்போக்கு பெண்கள் கழக தேசியக் குழு உறுப்பினர்கள் பிலோமினா, ஜெயந்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.* ❑





# வாச்சாத்தி பழங்குடியினர் மீதான வன்கொடுமையும் உயர் நீதிமன்றத் தீர்ப்பும்

**அ.சந்திரமோகன்**

சுதந்திரத்திற்குப் பிந்தைய தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சி காலத்தில், சந்தன மரங்களை வெட்டிக் கடத்திய ஆளுங்கட்சி கொள்ளையர்களைக் காப்பாற்ற, அப்பாவி பழங்குடியினர் பலிகடாக்கள் ஆக்கப்பட்ட, படுமோசமான வன்கொடுமை தாக்குதலுக்கு உள்ளான கொடூரமான சம்பவம் தான் 'வாச்சாத்தி வன்முறை' என்பதாகும். அது பழங்குடியினப் பெண்கள், சிறுமியர் மீது பாலியியல் கூட்டுப் பலாத்கார வன்முறையை நடத்திய வனத்துறை, காவல்துறை சார் குற்றவாளிகளின் ஆணாதிக்க வெறியாட்டத்தின் சாட்சியமும் ஆகும்.

**வாச்சாத்தி வன்முறை, நீதிக்கான போராட்டம் : கடந்து வந்த பாதை :**

தருமபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிப் பட்டி இடையே உள்ள கல்வராயன் மலைத் தொடரின் அடிவாரப் பகுதியில் கலசப்பாடி அருகில் உள்ள வாச்சாத்தி மலை கிராம பழங்குடியினர் சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டதாக, 40 ஆண்டுகளுக்கு முன்னர், மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் 1992 ஜூன் 20ம் தேதி காக்கி சட்டையில் வந்த 155 வனத் துறையினர், 108 காவல் துறையினர் மற்றும் 6 வருவாய் துறையினர் கூட்டாகச் சோதனை என்ற பெயரால், வீடுகளுக்குள் புகுந்து பொருட்களை சூறையாடினர். பெண்களின் தலைமுடியைப் பிடித்து இழுத்தும், கால்நடைகள் மேய்த்துக் கொண்டு இருந்த பெண்களை அடித்து தரதரவென்று இழுத்தும் வந்தனர்; 90 பெண்கள் உட்பட 133 பேரை கைது செய்து, ஊர் நடுவே இருந்த ஆலமரத்தடிக்கு அழைத்து வந்தனர். அன்று மாலை, ஏரிக்கரையில் மறைத்து வைத்துள்ள சந்தனமரக் கட்டைகளை எடுத்து தருமாறு கூறி, 18 சிறுமியர் மற்றும் இளம்பெண்களை மட்டும் தனியாக அழைத்துச் சென்று, வனத் துறையினரும், காவல் துறையினரும் ஏரிக்கரையில் பாலியல் வன்கொடுமை செய்தனர். அன்று உயிருக்கு பயந்து தப்பி ஓடியவர்கள் தவிர, அங்கே சிக்கிய பிற அனைத்து வாச்சாத்தி பழங்குடியினரையும் அரூர் வனத்துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்று தாக்கினர், அடைத்து வைத்தனர்.

பழங்குடியினர் பட்டினியால் வாட, அடுத்த நாள் வனத்துறையினர் வாச்சாத்தியில் இருந்து கொள்ளையடித்து வந்த கோழி, ஆடுகள், அரிசி போன்றவற்றை சமைத்து அவர்கள் முன்னால் சாப்பிட்டனர். அன்றிரவு பெண்கள் உள்ளிட்ட அனைவரின் கைகளிலும் விலங்குகள் போட்டு அரூர் மெயின் ரோட்டில் நடக்க வைத்து நீதிபதி முன்னால் ஆஜர்படுத்தினர். சட்டம் ஒழுங்கை காக்க வேண்டிய அரசு அமைப்புகளின் பாதுகாவலர்கள் வன்முறையாளர்களாகவும், பெண்களை பாலியல் ரீதியாக குறிவைத்து சூறையாடும் ஆணாதிக்க திமிர்பிடித்த கயவாளிகளாகவும் செயல்பட்டதும் விசாரணைகளின் இயக்கப் போக்கில் தான் அம்பலமாகின. ஆனால், இத்தகைய வன்கொடுமைகளை புரிந்த வனத்துறை, காவல்துறையினர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை. அப்போதைய தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசிய வனத்துறை அமைச்சர் செங்கோட்டையன், இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தினார். மற்றொருபுறம் புகார் தெரிவிக்க கூட முடியாத நிலையில் பழங்குடியினர் அச்சத்தில் ஓடிஒளிந்து கொண்டு இருந்தனர்.

சுமார் ஒரு மாதம் கழித்து, அப்போது தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த, தற்போதைய சிபிஐஎம் மத்தியக்குழு உறுப்பினர் பெ.சண்முகம், அரூர் முன்னாள் எம்எல்ஏ அண்ணாமலை, தேசிய பழங்குடியின ஆணையம், மகளிர் அமைப்பினர் போன்றவர்கள் எல்லாம் நேரில் சென்று பார்த்தும், சிபிஐ(எம்) முன்னாள் மாநிலச் செயலாளர் மறைந்த தோழர் ஏ.நல்லசிவன் சட்டரீதியாக எடுத்த முயற்சிகளின் விளைவாக, உச்ச நீதிமன்றம் இச்சம்பவம் குறித்து மத்திய புலனாய்வுத் துறை(சிபிஐ) விசாரணைக்கு 1993ல் உத்தர விட்டது.

சிபிஐ 2 ஆண்டுகள் விசாரணை நடத்தி, 1995ல் வழக்குபதிவு செய்தது. குற்றத்தில் ஈடுபட்டதாக 155 வனத் துறையினர், 108 காவல்துறையினர், 6 வருவாய் துறையினர் என 269 பேரை கைது செய்தது. இந்த வழக்கை விசாரித்த தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு

நீதிமன்ற நீதிபதி குமரகுரு அவர்கள் கடந்த 2011 செப்.29ல் இச்சம்பவத்தில் ஈடுபட்டு அப்போது உயிருடன் இருந்த 215 பேர் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளித்தார். இதில் 12 பேருக்கு 10 ஆண்டுகளும், 5 பேருக்கு 7 ஆண்டுகளும், மற்றவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டுகள் வரையும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், குற்றவாளிகள் தரப்பில் இந்த தண்டனையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி பி.வேல்முருகன் அவர்கள் வாச்சாத்திக்கு நேரடியாக சென்று விசாரித்தார். பாதிக்கப்பட்ட பழங்குடியினர் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் சிறப்பாக வாதிட்டனர். சுமார் 12 ஆண்டுகள் கழித்து கடந்த செப்.29 ல், உயர்நீதிமன்ற நீதிபதி சிறப்பு வாய்ந்த தீர்ப்பை வழங்கினார்.

**தீர்ப்பில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்:**

"மொத்தம் 18 பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளனர். 13 வயது சிறுமி, 8 மாத கர்ப்பிணியைக்கூட விட்டு வைக்காமல், குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஈவு இரக்கமோ, மனிதாபிமானமோ இல்லாமல் அரக்கத்தனத்துடன் செயல்பட்டுள்ளனர்."

"சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டவர்களை அரசுப் பணி நிமித்தமாகவே கைது செய்ததாகவும், அதற்குப் பழிவாங்கும் விதமாகவே பொய்யான பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. அப்பாவி இளம்பெண்களை வன்கொடுமை செய்வது அரசுப் பணி கிடையாது. சந்தன மரக் கடத்தலில் ஈடுபடும் பெரும் புள்ளிகளைக் காப்பாற்றும் நோக்கில் வனத் துறை, காவல்துறையினர் ஒட்டுமொத்த கிராமத்தையும் பலிகடா ஆக்கியுள்ளனர். 5 நாட்களாக சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு உள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களை மறுநாள் நள்ளிரவு 12 மணிக்கு ரிமாண்ட் செய்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து ஒரு மாதம் கழித்தே வெளியே தெரியவந்துள்ளது. 3 ஆண்டுகளுக்கு பிறகே அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு பிறகே நீதிமன்ற விசாரணை தொடங்கியுள்ளது. சீருடை அணிந்த அரசு ஊழியர்கள்தான் குற்றம் செய்துள்ளனர் என்பதை சிபிஐ உறுதி செய்துள்ளது."

"குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பது மாவட்ட அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். தவிர, பாதிக்கப்பட்ட வாச்சாத்தி பெண்களுக்கு பாதுகாப்பாக நிற்காமல், குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர்களைக் காப்பாற்றும் நோக்கிலேயே அப்போதைய அரசும் செயல்பட்டது கண்டனத்துக்குரியது."

தர்மபுரி அமர்வு நீதிமன்றம் 215 வனத்துறை, காவல்துறை மற்றும் வருவாய் துறை பணியாளர்களுக்கு வழங்கிய சிறைத் தண்டனைகளை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியது; வாச்சாத்தி பாலியல் வன்கொடுமை வழக்கில், பாதிக்கப்பட்ட 18 பழங்குடியின பெண்களுக்கும் அரசு வேலையுடன் தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்குமாறு தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றத்தை மூடி மறைத்த அப்போதைய தருமபுரி ஆட்சியர், காவல்துறை எஸ்.பி., மாவட்ட வனத் துறை அதிகாரி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தண்டனை அனுபவிக்க வேண்டியவர்களை சிறையில் அடைக்க கீழமை நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதிமுக அரசாங்கம் குற்றவாளிகளை பாதுகாக்க இழிவாக செயல்பட்டது என்பதை தீர்ப்பின் பின்வரும் பத்திகள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

"உண்மையான கடத்தல்காரர்களையும், பெரிய ஆட்களையும் பாதுகாப்பதற்காக, வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வனத்துறை அதிகாரிகள், அப்போதைய அரசின் உதவியுடன் பெரியதொரு மேடை நாடகம் அரங்கேற்றம் செய்தார்கள், இதில் அப்பாவி பழங்குடியினர் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்...."

**உயர் நீதிமன்ற தீர்ப்பின் பத்திகளில்....**

பத்தி 67ல்... *சாட்சி எண் 13-ன் சாட்சி ஆதாரத்திலிருந்து, வாச்சாத்தி கிராமத்தை சேர்ந்தவர்களின் உதவியுடன் வெளியாட்களால் சந்தன மரங்கள் கடத்தப்படுவது தொடர்பாக அவர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோரிடம் புகார் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. முருகன், கணேசன், பொள்ளாச்சி ராமசாமி, நாமக்கல் மஸ்தான் ஆகியோர் பல்வேறு ரேஞ்ச் அலுவலர்கள் தண்டபாணி, நாகராஜன் ஆகியோர் உதவியுடன் வாச்சாத்தி கிராமத்தை சேர்ந்த சிலரை ஈடுபடுத்தி சட்டவிரோதமாக சந்தன மரங்களை வெட்டி அகற்றி மறைக்கும் பணியில் ஈடுபட்டனர். வனத்துறை அதிகாரிகளின் உதவியுடன் கடத்தல் காரர்கள் மறைவான இடங்களில் இருந்து சந்தன மரங்களை எடுத்துச் செல்வது வழக்கமாகிவிட்டது.*

*எனவே மேற்படி கிராமவாசிகளின் சாட்சியங்களில் இருந்து பெருமளவிலான சந்தன மரக் கடத்தல் நடவடிக்கைகள், அனைத்தும் வன அதிகாரிகளின் உதவியுடன் மேற்படி பெரிய ஆட்களால் செய்யப் பட்டன என்பது தெளிவாகின்றது. துரதிர்ஷ்டவசமாக இந்த அப்பாவி கிராம மக்கள் சந்தன மரக் கடத்தல் குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் மீது பல வழக்குகளைப் பதிவு செய்தனர். சந்தனக் கடத்தல்காரர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் மீது வனத் துறையினர் வழக்குப்பதிவு செய்தும், காட்டு வதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை.*

பத்தி 72ல் *கடத்தல்காரர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும், கடத்தல்காரர்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் காட்டுவதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அனைத்து ஆதாரங்களும் அதிகாரிகளால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி கிராம மக்கள் மட்டுமே என்பதைக் காட்டுகிறது. இந்த சம்பவத்திற்குப் பிறகும், கிராம மக்கள் சிலர் தன்னார்வத் தொண்டு நிறுவனம் அல்லது நலச் சங்கம் மற்றும் எஸ்சி/எஸ்டி கமிஷன் உறுப்பினர்களின் உதவியுடன் நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு தொடர்ந்துள்ளனர். அதிகாரத்தில் இருந்தவர்கள் சம்பந்தப்பட்ட அப்பாவி மக்களின் குரலுக்கு செவி சாய்க்கவில்லை, அப்போதைய அரசும் கூட எந்த அக்கறையும் செலுத்தவில்லை, இது வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வன அதிகாரிகள் என இந்த கடத்தலில் சம்பந்தப்பட்ட சில பங்குதாரர்களை பாதுகாக்கவே அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. இத்தகைய உயர் அதிகாரிகளுடன் போட்டியிட இயலாத அப்பாவி கிராம மக்கள் மட்டுமே குறிவைக்கப்பட்டனர்.*

பத்தி 74ல் *சாட்சி எண்.7 மற்றும் 13 கடத்தலில் ஈடுபட்ட சில நபர்கள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு உதவிய அதிகாரிகள் அனைவரும் யார் என்று தகவல் கொடுத்துள்ளனர். அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கை எடுத்ததற்கோ, உண்மையான சந்தன மர கடத்தல்காரர்கள் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரப்பட்டதற்கோ எந்த ஆவணப் பதிவுகளும் இல்லை. எனவே, மேல்முறையீட்டாளர்களின் வாதத்தை ஏற்க முடியாது.*

பத்தி 99ல் *மேல்முறையீடு செய்த அனை வருமே சோதனை நடத்தும்போது, சோதனையின் நோக்கத்தை திசை திருப்பினர் என்பது வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்களைப் படிப்பதில் இருந்து தெளிவாகிறது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட வன அலுவலர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் உண்மைக் குற்றவாளிகள் யார் என்று தெரிந்திருந்தாலும், (அவர்களுக்கு மட்டுமேத் தெரிந்த காரணங்களால்) அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து தெளிவாகிறது. உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்க, அப்பாவி கிராம மக்கள் பலியாகின்றனர். எனவே, மேல்முறையீடு செய்தவர்கள் அனைவரும் குற்றம் செய்தார்கள் என்பதை அரசு தரப்பு நிரூபித்துள்ளது என்ற முடிவுக்கு இந்த நீதிமன்றம் வருகிறது.*

பத்தி 102ல் *தர்மபுரி மாவட்டத்தின் அப்போதைய ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் இவ்விவகாரத்தில் சிறிதளவும் அக்கறை காட்டவில்லை. பிரச்சினையின் தீவிரம் பற்றி கவலைப்படவே இல்லை... உண்மையான கடத்தல்காரர்களையும், பெரிய ஆட்களையும் பாதுகாப்பதற்காக, வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வனத்துறை அதிகாரிகள், அப்போதைய அரசின் உதவியுடன் பெரியதொரு மேடை நாடகம் அரங்கேற்றம் செய்தார்கள், இதில் அப்பாவி பழங்குடியினர் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்....*

பத்தி 103ல் *மேலும், அப்போதைய மாவட்ட ஆட்சியர், அப்போதைய காவல் கண்காணிப்பாளர் மற்றும் இறுதியாக அப்போதைய சம்பந்தப்பட்ட காலத்தில் இருந்த மாவட்ட வன அலுவலர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

உண்மையான குற்றவாளிகளை பாதுகாப் பதற்காக, அப்பாவி பழங்குடி மக்களை பலிகடாக்களாக்கிய, அப்போதைய தர்மபுரி மாவட்ட ஆட்சியர் தசதரன் ஐ.ஏ.எஸ்., மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ராமானுஜம் ஐ.பி.எஸ்., மாவட்ட வன அதிகாரி எல்.நாதன் ஐ.எப்.எஸ் ஆகியோர் மீது தமிழ்நாடு அரசு உடனடியாக, உரிய சட்டபூர்வமான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; அவர்கள் தண்டிக்கப்படுவதன் மூலமாக, வாச்சாத்தியில் பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்கான நீதியை முழுமைப்படுத்திட வேண்டும்.

'பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தாக்குதல் களில், பாரபட்சமாக, அநீதியாக, குற்றமய அலட்சியத்துடன் செயல்படும் உயர் அரசு அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள்' என்ற முன் மாதிரியான நடவடிக்கைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். ❑

# மோடி ஆட்சிக்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் தீர்ந்துவிட்டது! கூடுதல் பணம் கோரி கிராமப்புற வளர்ச்சித்துறை கோரிக்கை!!மௌனம் காக்கிறது மோடியரசின் நிதித்துறை!!!

– சி. மதிவாணன்

இந்த ஆண்டு ஏப்ரலில் துவங்கிய புதிய வேலை 6 மாதங்கள் கடப்பதற்குள் நிதி நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ளது. 2023–24 நிதியாண்டுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு ஒதுக்கியது. இது இதற்கு முந்தைய ஆண்டு செலவிடப்பட்ட தொகையைவிட 33 சதம் குறைவானதாகும். தற்போதைய நிலையில் வேலைத் திட்டம் ரூ.6,146.93 கோடி பற்றாக்குறையில் இருக்கிறது.

இதற்கு முந்தைய ஆண்டான 2022–23ல் ரூ. 73 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.60 ஆயிரம் கோடி, சென்ற ஆண்டுக்கான ரூ.73 ஆயிரம் கோடியை விட 18 சதம் குறைவான தாகும். ஆனால், 60 ஆயிரம் கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் உண்மையல்ல. 2022–23 நிதியாண்டில் தொழிலா ளர்களுக்கு வைக்கப்பட்ட சம்பள பாக்கி மட்டும் ரூ. 17 ஆயிரம் கோடியாக இருந்த நிலையில், அந்த சம்பள பாக்கி போக, மீதமுள்ள ரூ. 43 ஆயிரம் கோடியை மட்டும் வைத்து கிராமப்புற மக்களுக்கு முழுமையாக வேலை வாய்ப்பை வழங்கிட இயலாது.

இதனால், வாரக்கணக்கில் சம்பளம் வழங்கப்படாத நிலை இந்த ஆண்டும் ஏற்பட்டது. இதனால், சென்ற செப்டம்பர் மாதத்தின் தகவல்படி கிராமப்புற வளர்ச்சித்துறை ஒன்றிய அரசிடம் மேலும் 23 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கும்படி கோரியிருந்தது. ஆனால், நிதியமைச்சகம் இதுபற்றி வாயைத் திறக்க வில்லை.

ஆனால், எதிர்க்கட்சிகள் நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவது பற்றி கேள்வி எழுப்பிய பின்பு நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வாய் திறந்தார். "வேலை உறுதித் திட்டம் கோரிக்கை எழுவதை ஒட்டி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் திட்டமாகும். மாநிலங்களிடமிருந்து கோரிக்கை வரும்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என்றார். இது ஒவ்வொரு ஆண்டும் பாடப்படும் தேய்ந்துபோன பல்லவியாகும்.

இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.60 ஆயிரம் கோடியில் ரூ.56,105.69 கோடி செலவு செய்யப்பட்டுவிட்டது என்று ஒன்றிய அரசின் கிராமப்புற வளர்ச்சித்துறை அளிக்கும் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. இதே அமைச்சகத்தின் வலைமனை புள்ளிவிவரம் ரூ.6,146 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று சொல்கிறது. இது குறித்து கிராமப்புற வளர்ச்சித்துறையின் செயலாளர் ஷகிலேஷ் குமார் சிங்கிற்கு கேள்விகளை ஊடகத்தினர் அனுப்பிய போது மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது.

ஒதுக்கப்பட்ட நிதி ஒவ்வொரு ஆண்டும் பற்றாக்குறையாகிப்போகிறது. அதுவும் ஏறக்குறைய செப்டம்பர் மாதத்திலேயே பணம் கையிருப்பு இல்லை என்ற நிலை ஏற்படுகிறது. "கேட்டால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என்று திரும்பத் திரும்ப சொல்லும் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில்தான் துணை பட்ஜெட்டை நிறை–வேற்றப்போகிறது.

வரும் நவம்பர் 29 முதல் டிசம்பர் 23 வரையான காலத்தில் நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் நடக்கவிருக்கிறது. அப்போதுதான் வேலை உறுதித் திட்டத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்று தோன்றுகிறது.

2021–22 நிதியாண்டிலும் 2022–23 நிதியாண்டிலும் வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் 25 சதம் வெட்டி சுருக்கப்பட்டது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் கிராமப்புற வளர்ச்சித்துறை ரூ.25,000 கோடிகளை ஒதுக்கும்படி கேட்டது. ஆனால், ரூ.16,000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது.

வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பலன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 11.37 கோடி ஆகும். இது 2022 டிசம்பர் மாதம் வரை வேலை பெற்றுள்ளவர்கள் பற்றிய கணக்கு என்று கிராமப்புற வளர்ச்சித்துறை தெரிவிக்கிறது. இத்திட்டத்தின் செயல்பாடு மிக மோசமான

வேலை உறுதித் திட்டத்தை மோடி அரசு ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. மேற்கு வங்கத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசை நெருக்கடிக்குத் தள்ளவும், பாஜகவுக்கு வாக்களிக்காத வங்க மக்களைத் தண்டிக்கும் குறு புத்தியின் காரணமாகவும் மேற்கு வங்கத்திற்கு வழங்க வேண்டிய வேலை உறுதித் திட்ட நிதியை நிறுத்தி வைப்பதாக மோடி அரசு 21 டிசம்பர் 2021 அன்று அறிவித்தது. அதன் காரணமாக 2023–24 ஆண்டு நிதி அறிக்கையில் மேற்கு வங்கத்தில் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. விளைவாக, இந்த ஆண்டு முழுமைக்கும் மேற்கு வங்க மாநிலத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலை மறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தங்களின் உடல் நலப் பிரச்சனைகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்குக்கூட கையில் காசில்லாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மம்தா அரசு ஊழல் செய்ததாகவும், திட்ட அமுலாக்கத்தில் முறைகேடுகள் நடந்ததாகவும் ஒன்றிய அரசு குற்றம் சாட்டியுள்ளது. அது உண்மையென்றால், குற்றம் இழைப்பதற்குக் காரணமான மாநில அரசுக்கு எதிராக மோடி அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மாறாக, எந்தக் குற்றமும் செய்யாத மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறது ஒன்றிய அரசு.

*சூழலுக்கு சென்று தற்போது தமிழ்நாடு உள்பட 21 மாநிலங்களில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் முற்றிலும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.*

*வேலை உறுதித் திட்டத்தில், தமிழ் நாட்டில் மட்டும் 93.35 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்றாலும், 65 லட்சம் பேர்களுக்கே வேலை வழங்கப்பட்டு வருகிறது. இவர்களிலும் 86 சதவிகிதம் பேர் பெண்கள், 14 சதவிகிதம் பேர் ஆண்கள், ஒட்டுமொத்த தொழிலாளர் எண்ணிக்கையில் 30 சதவிகிதம் பேர் பட்டியல் பழங்குடியினர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*நிதி ஒதுக்கீட்டைச் சுருக்குவது, ஆதார் அட்டை இணைப்பு கட்டாயம், புகைப்படம் எடுப்பது கட்டாயம் என்பது போன்ற பல்வேறு நடைமுறை தந்திரங்களைப் பயன்படுத்தி மக்களை வேலை உறுதித் திட்டத்திலிருந்து விலக்கி வைப்பது மோடி அரசின் தந்திரமாக நீடித்து வருகிறது. கிராமப்புற இந்தியாவின் வேலை வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்றால் மோடி ஆட்சிக்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.* ❑

## பீடித் தொழிலாளர்கள் முற்றுகைப் போராட்டம்

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம், திப்பணம்பட்டி மற்றும் ஆரியங்காவூர் கிராமத்தில் உள்ள 250 பீடித் தொழிலாளர்கள் காஜா பீடி கம்பெனி முன்பு போனஸ், விடுப்புச் சம்பளம் வழங்கிட கோரியும் ஓர் ஆண்டாக பிஎப் அலுவலகத்தில் செலுத்தாமலுள்ள, தொழிலாளர்களின் பிஎப் பணத்தை உடனே செலுத்திடக் கோரியும் தரமான இலை ஆயிரம் பீடிக்கு 700 கிராம் வழங்கிடக் கோரியும் ஏப்ரல் முதல் வழங்க வேண்டிய பஞ்சப்படி உயர்வை அரியர்ஸ் உடன் வழங்கிடவும் கோரி ஏஐசிசிடியு பீடித் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் ஐயம்பெருமாள் தலைமையில் 13.10.2023 அன்று ஏஐசிசிடியு பீடிச் சங்கத் தொழிலாளர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர். அதைத் தொடர்ந்து காஜாபீடி கம்பெனி நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உடனடியாக இரண்டு வார நிலுவைச் சம்பளம் வழங்கப்படும், இந்த மாதம் நடைபெறும் கோயில் திருவிழாவுக்குள் போனஸ், லீவு சம்பளம் வழங்கப்படும், தரமான இலை வழங்கப்படும், ஓராண்டுகளாக செலுத்தப்படாத பிஎஃப் பணத்தை இரண்டு மாதத்திற்குள் அவர்களின் பிஎஃப் அக்கவுண்டில் செலுத்தப்படும், பேக்கிங் ஸ்டாப் லேபிள் ஒட்டும் தொழிலாளர்களுக்கு தாமதமில்லாமல் மாதச் சம்பளம் வழங்கப்படும், 2023 ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி நிலுவையுடன் வழங்கிட ஏற்பாடு செய்யப்படும் என உறுதி அளித்ததின் அடிப்படையில் முற்றுகை போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.



## வீட்டு மனை – பட்டா வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட், அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் இணைந்து 16.10.2023 அன்று காலை எரியோடு பேருந்து நிறுத்தம் அருகே வீடில்லாத அனைவருக்கும் வீட்டு மனை – பட்டா வழங்க கோரியும், வழங்கப்பட்ட பட்டாவிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை அளந்து பிரித்துத் தரக் கோரியும் எரியோடு, மீனாட்சிபுரம், பாண்டியன் நகர், மந்தக்குடும்பம்பட்டி, மறவப்பட்டி, கலைஞர் நகர், குண்டாம்பட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு புதிய வீட்டுமனை-பட்டா வழங்கக் கோரியும் கிளைச் செயலாளர் ஹோசிமின் தலைமையில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் முருகேசன் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார். இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, ஏஐசிடபிள்யுஎப் மாநிலச் செயலாளர் தோழர் இரவி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி உரையாற்றினர். தோழர்கள் அசோகன், கந்தசாமி, பாலுபாரதி, சங்கிலி சோமு, பிரஷ்னேவ் உட்பட 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.*

## கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

*தாம்பரம் மாநகராட்சி முன்பு 16.10.2023 அன்று சிபிஐஎம்எல் தாம்பரம் மாநகர செயலாளர் தோழர் அ.ஆபிரகாம் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்க்க கோரி கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெருங்களத்தூர், குண்டுமேடு, அறிஞர் அண்ணா நகர் பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஆப்பாட்டத்தில் சிபிஐஎம்எல் ஒன்றியச் செயலாளர் தோழர் பாலாஜி, கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் தோழர் மு.தினேஷ்குமார், புஇக மாவட்டத் தலைவர் சி.இராஜேஸ்குமார், முற்போக்கு பெண்கள் கழக மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி, சிபிஐஎம்எல் மாவட்டச் செயலாளர் தோழர் சொ.இரணியப்பன், குண்டுமேடு பகுதியை சார்ந்த தோழர்கள் தஸ்தகீர் பாஷா, மணி, சரவணன், வேலாயுதம் மற்றும் விசிக தோழர் அன்பு ஆகியோர் கண்டன உறையாற்றினர். முடிவில் மாநராட்சி மேயர் மற்றும் ஆணையாளரைச் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது!*

## அக்.11 காவிரி டெல்டா முழு அடைப்புக்கு ஆதரவாக...

*உச்சநீதிமன்றம் அமைத்த காவிரி நதிநீர் ஆணைய உத்தரவின் அடிப்படையில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய அளவு தண்ணீரை கர்நாடகா அரசு திறந்துவிட வலியுறுத்தியும், தமிழ்நாட்டின் கோரிக்கையை தொடர்ந்து அலட்சியப்படுத்தும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் 'தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்கக் கூடாது' என்று கர்நாடகத்தில் போராடி வரும் பாஜக உள்ளிட்ட சில அமைப்புகளின் குறுகிய இனவெறுப்பு செயல்பாடுகளைக் கண்டித்தும் காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கத்தின் சார்பில் நடைபெற்ற அக்டோபர் 11 முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் அகில இந்திய விவசாயிகள் மகாசபை மற்றும் அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர் சங்கம் சார்பில் தோழர்கள் திரளாகப் பங்கெடுத்துக் கொண்டனர். கும்பகோணத்தில் ஏஐகேஎம் மாநிலக் குழு உறுப்பினர் கண்ணையன், சிபிஐஎம்எல் நகரச் செயலாளர் மதியழகன், ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் ராஜன் மற்றும் தோழர்கள் மாசிலாமணி, தவச்செல்வன், செல்லத்துரை தலைமையிலும், தஞ்சாவூர் நகரில் சிபிஐஎம்எல் ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.ராஜேந்திரன் தலைமையிலும், புதுக்கோட்டையில் ஏஐகேஎம் மாநிலக் குழு உறுப்பினர் சக்திவேல் மற்றும் அயர்லா மாநில நிர்வாகி வளத்தான் தலைமையிலும் தோழர்கள் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.*

## ஏஐசிசிடியு நாமக்கல் மாவட்ட 3வது மாநாடு

*ஏஐசிசிடியு நாமக்கல் மாவட்ட 3வது மாநாடு 16.10.2023 அன்று பள்ளிப்பாளையத்தில் நடைபெற்றது. ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் பாலசுப்பிரமணியன் துவக்கவுரையாற்றினார். முற்போக்கு பெண்கள் கழக அமைப்பாளர் தோழர் தேன்மொழி, சிபிஐஎம்எல் மாவட்டக்குழு உறுப்பினர் கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினர். இகக(மாலெ) மத்தியக் குழு உறுப்பினர் தோழர் சந்திரமோகன் நிறைவுரையாற்றினார். 15 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக பொன்.கதிரவன், பொதுச் செயலாளராக வெங்கடேசன், பொருளாளராக பச்சியம்மாள், துணைத் தலைவராக டி.முருகன், துணைச் செயலாளராக எம்.முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.*

# ஏஐசிசிடியு கரூர் மாவட்ட முதல் மாநாடு






அகில இந்திய தொழிற்சங்க மய்ய கவுன்சில்(ஏஐசிசிடியு) கரூர் மாவட்ட முதல் மாநாடு 15.10.2023 அன்று, கரூர் காவேரி அம்மாள் திருமண மண்டபத்தில், தோழர் என்.கே.நடராஜன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. தோழர் என்.கே.நடராஜன் மற்றும் மறைந்த தோழர்களுக்கும் தியாகிகளுக்கும், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போரில் பலியான மக்களுக்கும் மின் வாரியத்தில் விபத்தில் இறந்து போன ஒப்பந்தத் தொழிலாளர் ரமேஷ், கேங்மேன் கிருபாகரன், வேடசந்தூர் கருப்பசாமி ஆகியோருக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் மாநாடு துவங்கியது.

தோழர்கள் பா.செந்தில்குமார், எம்.பிலோமினா, கே.சரவணன், வீரப்பன், கே.குமார் ஆகியோர் மாநாட்டைத் தலைமையேற்று நடத்தினர்கள். மாநாட்டுப் பார்வையாளரும், ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவருமான தோழர் எஸ்.எம். அந்தோணிமுத்து மாநாட்டில் துவக்கவுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, ஏஐசிசிடியு மாவட்ட அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் மா.பால்ராஜ் மாநாட்டு அறிக்கையை முன்வைத்தார். ஏஐசிசிடியு மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் ஆர்.பொன்னுத்துரை வாழ்த்துரை வழங்கினார். பின்னர் 11 பேர் கொண்ட ஏஐசிசிடியு மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக பா.செந்தில்குமார், மாவட்டச் செயலாளராக மா.பால்ராஜ், மாவட்டத் துணைத் தலைவர்களாக எம்.பிலோமினா, கே.சரவணன், மாவட்டத் துணைச் செயலாளராக லட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் மு.இராமச்சந்திரன் நிறைவுரையாற்றினார். ❑

# ஏஐசிசிடியு திருநெல்வேலி மாவட்ட 5வது மாநாடு




அகில இந்திய தொழிற்சங்க மய்ய கவுன்சில்(ஏஐசிசிடியு) திருநெல்வேலி மாவட்ட 5வது மாநாடு 8.10.2023 அன்று பிரதிநிதிகள் மாநாடாக நெல்லையில் நடைபெற்றது. மறைந்த தோழர்களுக்கும் தியாகிகளுக்கும் அஞ்சலி செலுத்திய பின்னர் மாநாடு துவங்கியது. ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஜி.ரமேஷ் மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட அறிக்கையை ஏஐசிசிடியு நெல்லை மாவட்டப் பொதுச் செயலாளர் தோழர் கா.கணேசன் முன்வைத்தார். ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் த.சங்கரபாண்டியன் சிறப்புரையாற்றினார். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளரும் மாநாட்டுப் பார்வையாளருமான தோழர் மா.பால்ராஜ் வாழ்த்துரை வழங்கினார். இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் மா.சுந்தர்ராஜ் நிறைவுரையாற்றினார். ஏஐசிசிடியு நெல்லை மாவட்டத் தலைவராக தோழர் மாரிமுத்து, மாவட்டப் பொதுச் செயலாளராக தோழர் கா.கணேசன் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். ❑

## தோழர் அன்சர் பாஷாவுக்குச் செவ்வஞ்சலி



தோழர் அன்சர்பாஷா 08.10.2023 அன்று இரவு சென்னை, பெருங்களத்தூர் குண்டுமேடு பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உற்சாகமாக கலந்து கொண்டு உரையாற்றினார். கூட்டம் முடிந்து அந்த உற்சாகத்துடன் வீட்டிற்குச் சென்றவர் அன்று இரவு 11.30 மணியளவில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமுற்றார் என்கிற செய்தி இகக(மாலெ) கட்சித் தோழர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

அன்சர் என்றால் தீப்பொறி நினைவுக்கு வரும். தீப்பொறி என்றால் அன்சர் நினைவுக்கு வருவார். நீண்ட கால கட்சி ஊழியர். தொலைபேசி துறையில் பணியாற்றியபோது, தீவிர தொழிற்சங்க, கட்சிப்பணி ஆற்றியவர். ஒரு இடைவெளிக்குப் பிறகு அதுவும் ஒரு இக்கட்டான தருணத்தின் போது கட்சியில் இணைந்து, முதிர்ந்த வயதிலும் ஒரு இளைஞனைப் போல் பணியாற்றினார். சிபிஐஎம்எல் லிபரேசன் கட்சியின் சென்னை பெருநகர கமிட்டி உறுப்பினராகவும் தாம்பரம் மாநகரக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்த தோழர் அன்சரின் சலியாத உணர்வும் இரவு முழுவதும் உழைக்கும் சளைக்காத உழைப்பும்தான் தீப்பொறியை சந்தாதாரர்களுக்கும் வாசகர்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முக்கிய சக்தியாக விளங்கியது. தீப்பொறிக்கும் கட்சிக்கும் மிகப் பெரிய இழப்பு, தோழர் அன்சரின் மறைவு. கடின உழைப்பின் அடையாளமான தோழர் அன்சரது அர்ப்பணிப்பை பின்பற்றி தீப்பொறியையும் கட்சியையும் வலுப்படுத்த உறுதியேற்போம்! அக்டோபர் 10–20 தீப்பொறி சிறப்பு இயக்கத்தை தோழர் அன்சருக்கு அர்ப்பணிப்போம்! தோழர் அன்சருக்கு செவ்வஞ்சலி! அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்! ❑

## தோழர் பழனிவேலுவுக்குச் செவ்வஞ்சலி



சென்னையின் பிரபலமான தொழிற்சாலையான டிஅய் டைமண்ட் செயின் தொழிற்சாலையில் தொழிலாளியாக பணிபுரிந்து வந்த, ஏஅய்சிசிடியு, இகக(மாலெ) வழிகாட்டுதலால் ஆலையின் தொழிற்சங்கத் தலைவராக தொழிலாளர்களால் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு நீண்டகாலம் பணிபுரிந்த தோழர் பழனிவேல் இறப்பு செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. உடல் நலமின்றி சிகிச்சையில் இருந்த தோழர் பழனிவேல் 9.10.2023 அன்று மரணமடைந்தார்.

எல்டியுசி தொழிற்சங்கத் தலைவர்களுள் ஒருவரான தோழர் பழனிவேல், ஏஅய்சிசிடியு தலைவராகவும், இகக(மாலெ) மாநிலக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்தவர். இகக(மாலெ) கட்சிப் பதாகையில் தேர்தல் போராட்டத்திலும் செயலூக்கமாக பங்கு பெற்றவர். தொழிலாளர்களுக்காக போராடிய தலைவர், தோழர் பழனிவேல் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) தனது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது. தொழிலாளர் வர்க்கம் மீது மோடி ஆட்சியின் ஈவிரக்கமற்ற தாக்குதலை எதிர்த்துப்போராட, அவரது போர்க்குணம் தொழிலாளர்களுக்கு நிச்சயம் ஊக்கமளிக்கும்.

அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை இகக(மாலெ) தெரிவித்துக் கொள்கிறது. ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.10.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

## தாம்பரம்




## தஞ்சை




## வண்டலூர்




## எரியோடு




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh